வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 14.07.2022 வியாழக்கிழமை | இதழ் : 220 | பக்கங்கள் : 16





மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.


# இராணுவ விமானத்தில் மாலைதீவுக்கு தப்பிய கோட்டா அங்கிருந்து நேற்றிரவு சிங்கப்பூர் நோக்கி பயணமானார்!

## பதவி விலகாமலே நாட்டைவிட்டு வெளியேறினார்

கொழும்பு, ஜூலை 14
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று அதிகாலை இராணுவ விமானம் ஒன்றில் நாட்டை விட்டுத் தப்பியோடி மாலைதீவு சென்றடைந்தார். அங்கிருந்து நேற்றிரவு அவர் சிங்கப்பூருக்கு பயணமானார்.

இலங்கையில் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் ஜனாதிபதிக்கு கோட்டாபயவுக்கு எதிராக பெரும் மக்கள் போராட்டம் வெடித்துள்ள நிலையில் அவர் நாட்டில் இருந்து வெளியேறியுள்ளார்.

மாலைதீவின் தலைநகரான மாலேயில் உள்ளூர் நேரப்படி நேற்று அதிகாலை 03:00 மணிக்கு அவர் பயணித்த இராணுவ விமானம் தரையிறங்கியது.

அங்கிருந்து பலத்த பாதுகாப்புடன் பிறிதொரு இடத்துக்கு கோட்டாபய சென்றுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

15

# அவரகாலச்சட்டம் உடன் நடைமுறை

## மேல் மாகாணத்தில் ஊரடங்கு

கொழும்பு, ஜூலை 14
உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் மேல்மாகாணத்தில் ஊரடங்குச் சட்டத்தினை நடைமுறைப் படுத்தும்படியும் நாடு முழுவதும் அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப் படுத்தும்படியும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க நேற்று

15

# ஜனாதிபதி பதவி விலகாவிடில் நான் பதவியைத் துறப்பேன்!

## கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் நேற்று அறிவித்தார் சபாநாயகர்

கொழும்பு, ஜூலை 14
'ஜனாதிபதி பதவி விலகாவிடில் நான் பதவி விலகுவேன்' எனக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் சபா நாயகர் மஹிந்த யாப்பா தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற கட்சித்தலைவர்கள் கூட்டத்தின்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# பிரதமர் ரணில்தான் முதலில் பதிவியைத் துறக்கவேண்டும்

## அனைத்துக் கட்சி கூட்டத்தில் நேற்று ஏகமனதாக தீர்மானம்

கொழும்பு, ஜூலை 14

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகுவதற்கு முன்னதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலக வேண்டும் என நேற்று மாலை நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கட்சித் தலைவர்கள் ஏகமனதாக தீர்மானம் மேற்கொண்டனர்.

தற்போதைய அசாதாரண நிலையையடுத்து கட்சித் தலைவர்களை அவசர கலந்துரையாடலுக்கு வருமாறு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று அழைப்பு விடுத்திருந்தார்.

15

# பஸிலும் நேற்று அதிகாலையில் அமெரிக்காவுக்கு தப்பியோட்டம்!

## ராஜபக்ஷ குடும்பத்தில் மேலும் 6 பேர் பயணம்?

கொழும்பு, ஜூலை 14
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று அதிகாலை இராணுவ விமானத்தில் நாட்டிலிருந்து வெளியேறி மாலைதீவு தப்பிச் சென்ற நிலையில் அவரது சகோதரரும் முன்னாள் நிதியமைச்சருமான பஸில் ராஜபக்ஷவும் நாட்டைவிட்டு நேற்று அதிகாலை வெளியேறினார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி

15

# ஜனாதிபதிக் கனவில் மூவர்!



கொழும்பு, ஜூலை 14
கோட்டாபய ராஜபக்ஷ மாலைதீவுக்கு தப்பி ஓடியுள்ள நிலையில் எதிர்வரும் 20ஆம் திகதி பாராளுமன்றில் வாக்கெடுப்பின் ஊடாக புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கு முன்னதாக எதிர்வரும் திங்கட்கிழமை புதிய ஜனாதிபதிக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்வதற்கான கால அவகாசம்

15

# பிரதமரின் அலுவலகத்துக்குள் நுழைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள்!

## இராணுவத்தின் தாக்குதலில் 30 பேருக்கு காயம்

கொழும்பு, ஜூலை 14
கொழும்பு மலர் வீதியில் உள்ள பிரதமர் அலுவலகத்துக்கு முன்பாக நடைபெற்ற போராட்டத்தில் பங்கு கொண்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் இராணுவத்தினரின் பலத்த எதிர்ப்பையும் கடந்து தடைகளை உடைத்து உள்ளே நுழைந்தனர்.

நேற்று காலை முதல் தீவிரம் பெற்றிருந்த போராட்டத்தின் மீது

15



# பதில் ஜனாதிபதியாக ரணில்!

## சபாநாயகருக்கு கோட்டாபய அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 14
ஜனாதிபதி தற்போது வெளிநாட்டுக்கு சென்றிருப்பதன் காரணமாக, ஜனாதிபதியின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக பதில் ஜனாதிபதியாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க செயற்படுவார் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கு அமைவாகவே இவ்வாறு ரணில் விக்ரமசிங்க பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் சபாநாயகர் இதன்போது குறிப்பிட்டார்.

ஜனாதிபதி

15

## இப்படியும் நடக்கிறது...!

கோட்டா கோ ஹோம் போராட்டக்காரர்கள் தமது இலக்கை அடைந்துவிட்டனர். கோட்டா வீட்டுக்கு போய்விட்டார். இனி அவர் திரும்ப வரப்போவதில்லை.

அடுத்து என்ன என்பதை இனி யாரும் சொல்ல வேண்டியதில்லை.

கோட்டாவின் வீட்டை முற்றுகையிட்டவர்கள் ஒரு லட்சமோ அல்லது அதையும்விட சற்றுக் கூடியதாகவே கூட இருக்கலாம். ஆனால், அந்த முற்றுகையில் கலந்துகொண்டவர்கள் எல்லோரும் இந்த போராட்டக்காரர்கள் என்று அறிவிக்கப்படுபவர்களின் ஆதரவாளர்களோ அல்லது அவர்களின் கொள்கையை நம்புபவர்களோ அல்ல. அவர்களும் கோட்டா போகவேண்டும் என்று விரும்பியவர்கள் அவ்வளவுதான்.

அதற்காக அந்த காலிமுகத்திடலில் போராட்டத்தை ஒழுங்கமைத்த அந்த ஒரு சிலர் மாத்திரம் நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்க போகின்றார்களா?

ராஜபக்ச குடும்பத்தின் அரசியல் மட்டும் இந்த நாட்டை இன்றைய நிலைக்கு கொண்டுவந்துவிடவில்லை. இதுவரை தொடர்ந்து ஆட்சியிலிருந்தவர்கள் செய்த தவறுகளும்தான் அதற்கு காரணம். ஆனால் அதில் பெரிதாக தவறு செய்தவர் யார்? சிறிதாக தவறுசெய்தவர் யார்? என்பது எல்லாம் இன்று அவசியமற்றது.

ஆனால், ராஜபக்ச குடும்பம் செய்த தவறுகளை மன்னிக்க முடியாததாக மக்கள் கருதியதாலேயே அவர்களுக்கு எதிராக இவ்வாறு கிளர்ந்தெழுந்தனர்.

அவர்கள் சகாப்தம் முடிந்துவிட்டது என்று நாம் நம்ப வேண்டும் என்றால், இனிவரும் காலங்களில் நடக்கின்ற சம்பவங்கள், நாடு பயணிக்கப்போகின்ற பாதை எப்படி இருக்கப் போகின்றது என்பதிலேயே அவர்களின் மீள்வருகையும் தீர்மானிப்படும்.

நாட்டுமக்கள் அனைவரின் மனங்களும் 'பெற்றோலாக' மாறியிருக்க, ஒருவர் தீயை மூட்டினால் அது பற்றி எரியவே செய்யும். அதற்காக அந்த தீயை மூட்டியவர், இனி என்ன செய்யவேண்டும் என்பதையும் நானே தீர்மானிக்கப் போகின்றேன் என்றால் அதற்கு இது மன்னராட்சிக்குரிய நாடல்ல. இது ஒரு ஜனநாயக நாடு.

அந்தப் போராட்டக்காரர்களிடம் இனி எப்படி நாட்டை வழி நடத்தவேண்டும் என்ற திட்டம் இருந்தால் அதனை மக்கள் மத்தியில் வைத்து ஒரு ஜனநாயக வழிமுறையில் ஆட்சியைப் பிடிக்க முயற்சிக்க வேண்டுமே தவிர, இப்போதே எமது அரசியலமைப்பு சட்டத்திற்கு விரோதமாக தாம் விரும்பியதைத்தான் செய்யவேண்டும் என்று அடம்பிடிப்பதை அனுமதிக்கப்போகின்றோமா?

ஜனாதிபதி கோட்டாபய, தற்போது வெளிநாட்டில் இருக்கிறார். இன்று அவர் தனது பதவியை ராஜினாமாச் செய்வார் என்று சபாநாயகரிடம் தெரிவித்திருந்ததாக முன்னர் கூறப்பட்டது. ஆனால் அவரோ இந்தப் பத்தியை எழுதிக்கொண்டிருக்கும்வரை பதவி விலகலுக்கான கடிதத்தை சபாநாயகருக்கு அனுப்பவில்லை.

மாறாக, இப்படியொரு கடிதத்தை நேற்று சபாநாயகருக்கு அனுப்பிவைத்திருக்கிறார்.

'இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், ஜனாதிபதியின் அதிகாரங்களையும், கடமைகளையும், நடவடிக்கைகளையும் நிறைவேற்றவும், நிகழ்த்தவும், செயல்படுத்தவும் இயலாதிருப்பதாக கருதுவதால், நான் இலங்கையில் இல்லாத இவ்வேளையில், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பிரதமரான கௌரவ ரணில் விக்கிரமசிங்கவை 2022 ஜூலை 13ஆம் திகதியிலிருந்து ஜனாதிபதியின் அதிகாரங்களையும், கடமைகளையும், நடவடிக்கைகளையும் நிறைவேற்றவும், நிகழ்த்தவும், செயல்படுத்தவும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 37 (1) பிரிவின் கீழ், நான் இலங்கையில் இல்லாத அக் காலப்பகுதிக்கு நான் இத்தால் நியமிக்கிறேன் என்பதை இதன்மூலம் நான் தெரியப்படுத்துகின்றேன்.'

இதுவே ஜனாதிபதி அனுப்பிய கடிதம். அதன் பின்னர் பதில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பெறுப்பேற்றிருக்கிறார்.

இந்நிலையிலேயே ரணிலுக்கு எதிராகவும் போராட்டக்காரர்கள் இப்போது தமது போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றனர்.

கோட்டா கோ ஹோம் போராட்டத்தை தொடக்கியவர்களில் இரண்டு இடதுசாரி கட்சிகளின் பின்புலம் என்பது இரகசியமானதல்ல. அந்த இரண்டு கட்சிகளையும் சேர்ந்தவர்கள் இப்போது தத்தமக்குள் மோதத் தொடங்கியிருக்கின்றனர். அலரிமாளிகையை கைப்பற்றி அங்கே இருப்பவர்களிடையே குளிரூட்டப்பட்ட அறை ஒன்றை யார்

பயன்படுத்துவது என்பதில் மோதல் ஏற்பட்டு பலர் காயமடைய நேர்ந்ததாக நேற்று முன்தினம் செய்திகள் வந்தன. இப்போது காலிமுகத்திடலிலும் அதேபோன்றதொரு குழு மோதல் நேற்று இடம்பெற்றிருக்கின்றது.

இவர்களே இப்போது நாட்டில் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று கட்டளை இடுகின்றார்கள். பாராளுமன்றத்தில் இருப்பவர்கள் யார் அடுத்த ஜனாதிபதி, யார் பிரதமர் என்பதில் முட்டிமோதிக்கொண்டிருக்கிறார்கள்.

நாடு ஒரு லெபனானாக மாறிக்கொண்டிருக்கின்றதா என்ற கேள்வி எழுவதைத் தடுக்க முடியவில்லை.!

**- ஊர்க்குருவி**

# மக்களின் அமைதிப் போராட்டத்தை முறியடிக்க அடக்குமுறையை ஆரம்பித்துள்ளது அரசாங்கம்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 14

இந்த நாட்டில் ஜனநாயகத்தை மதிக்கும் முழு மக்களும் முன்னெடுத்த அமைதிப் போராட்டத்தை முறியடிக்க அரசாங்கம் அடக்குமுறையை ஆரம்பித்துள்ளதாகவும் இந்த தருணத்தில் இருவரை பாதுகாப்பதை விடுத்து முழு நாட்டு மக்களையும் பாதுகாப்புப் படையினர் பாதுகாக்கவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களை வெளியிட்ட வண்ணம் ஆயுதமேந்திய பாதுகாப்புப் படையினரை வைத்து ஜனநாயகத்தை அழித்து மக்களை அடக்க அரசாங்கம் தூண்டி வருவதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இந்நேரத்தில் பாதுகாப்புப் படையினர் பொறுப்புடன் செயல்பட வேண்டும்.

அதிகார வெறி பிடித்த ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான கும்பலின் ஏமாற்றை உடனடியாக நிறுத்தவேண்டும். இனி மேலும் இந்த ஏமாற்று மோசடிக்கு இடமில்லை.

ஜனநாயகத்துக்காக போராடும் மக்களை அடக்கு முறைக்குட்படுத்தவேண்டாம். பாதுகாப்பு படையினர் மீது மக்கள் வைத்துள்ள மரியாதையை காப்பாற்றவேண்டும்.

மக்களின் அமைதியான வாழ்வுடன் விளையாடுவதை அரசாங்கம் கைவிட வேண்டும். இத்தருணத்தில் மக்கள் அமைதியாகவும் ஜனநாயகத்தை மதித்தும் செயற்பட வேண்டும்-என்றார். (அ)

# பிரதமர் அலுவலக வளாகத்தை அதிகாரிகளிடம் ஒப்படையுங்கள்

## சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 14

கொழும்பில் உள்ள பிரதமர் அலுவலகத்தை ஆக்கிரமித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டமை குறித்து, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

எனவே போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள், உடனடியாக பிரதமர் அலுவலக வளாகத்தை அதிகாரிகளிடம் ஒப்படைக்கவேண்டும் என்று சட்டத்தரணிகள் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

அரச அலுவலகங்களை ஆக்கிரமிக்க முயற்சிப்பது மற்றும் சொத்துக்களை சேதப்படுத்துவது அமைதியான போராட்டமாக இருக்காது என்று சங்கத்தின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் சபாநாயகர், பிரதமர் மற்றும் பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் நாட்டின் நிலையை சூழ்நிலையை புரிந்து கொண்டு மிகுந்த பொறுப்புடனும், தியாக உணர்வுடனும் செயற்படவேண்டும் என்றும் சங்கம் கோரியுள்ளது.

இதேவேளை, இந்த நாட்டின் அரசியல் தலைவர்கள் உறுதியளித்த அமைதியான அதிகார மாற்றத்திற்கு இடமளிக்குமாறு இலங்கை மக்களிடம், குறிப்பாக போராட்டங்களில் ஈடுபட்டுள் ளவர்களிடம் கோருவதாக சங்கம் வேண்டுகோள் விடுத் துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகல் குறித்த அறிவிப்பு நேற்று வெளியிடப்படும் என்ற எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் இருந்தது

எனினும், ஜனாதிபதி நாட்டை விட்டு வெளியேறியுள்ள நிலையில், அவரின் பதவி விலகல் கடிதம் தொடர்பில், பொதுமக்களுக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதற்கிடையில், பொது பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் மேல் மாகாணத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதாகவும் செய்திகள் வந்தன.

அத்துடன் அரசியலமைப்பின் கீழ் பிரதமரை பதில் ஜனாதிபதியாக நியமித்ததாக சபாநாயகர் அறிவித்தார்.

இந்த மாறுபட்ட தகவல் தொடர்புகள் பொதுமக்களிடையே குழப்பத்தையும் நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்தியுள்ளன என்றும் சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# பயங்கரவாத தடைச்சட்டத்தை நடைமுறைப்படுத்த முயற்சி!

## அனுரகுமார குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 14

பயங்கரவாத தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மக்களின் போராட்டங்களை அடக்குமுறைகளின் ஊடாக முடக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாடளாவிய ரீதியில் அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்துவதாக வெளியான தகவலை அடுத்து வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது சிந்தித்து செயற்படாவிட்டால் பாரிய அழிவை நோக்கிச் செல்ல வேண்டியேற்படும். தற்போது நாம் அழிவின் விளிம்பிலேயே இருக்கின்றோம்.

காரணம் இன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவி விலகலை அறிவிப்பார் என்று சபாநாயகர் கடந்த 9 ஆம் திகதி அறிவித்திருந்தார்.

எனினும் இதுவரை அதற்கான எந்தவொரு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. மாறாக பதில் ஜனாதிபதியாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க நியமிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் ஊடாக தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி பிரதமர் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட அரசாங்கம் அடக்குமுறைகளினால் மக்களின் போராட்டங்களைக் கட்டுப்படுத்த முயற்சிக்கின்றது.

அத்தோடு நாடளாவிய ரீதியில் அவசரகால சட்டத்தையும் , மேல் மாகாணத்தில் ஊரடங்கினையும் நடைமுறைப்படுத்துமாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்க உத்தரவிட்டிருக்கின்றார்.

இதற்கு மத்தியில் பயங்கரவாத தடை சட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாகவும் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இது தவறானதொரு செயற்பாடாகும்.

நாட்டில் தற்போதுள்ள பிரச்னைகளுக்கு அமைதியான முறையில் தீர்வுகளை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனை விடுத்து அடக்குமுறைகளின் ஊடாக போராட்டங்களை முடக்குவதற்கு முயற்சித்தால் அது பாரிய அழிவினையே ஏற்படுத்தும்.

எனவே மக்களின் குரலை செவிமடுத்து அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுமாறு வலியுறுத்துகின்றோம். பாதுகாப்பு தரப்பினரையும் மக்களுக்கு சார்பாக செயற்படுமாறு கோருகின்றோம்-என்றார். (அ)

Eelanadu ஈழநாடு
14.07.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், ஆணி 29

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ரணில் என்ன செய்யப்போகின்றார்?

‘ஈழநாடு’ ஏற்கனவே சுட்டிக்காட்டியபோது, ரணில் ஜனாதிபதியாக பொறுப்பேற்றிருக்கின்றார். இதன் மூலம் ரணிலின் நீண்டகால கனவான நிறைவேற்றதிகார கதிரை அவர் வசமாகியிருக்கின்றது. போராட்டக்காரர்களின் எதிர்ப்புக்களுக்கு மத்தியில்தான், ரணில் ஜனாதிபதியாகியிருக்கின்றார். ரணில் எவ்வாறு பிரச்னைகளை கையாளப் போகின்றார்?

இந்தத் தலையங்கத்தை எழுதிக்கொண்டிருக்கும்போது, பிரதமர் அலுவலகமும் போராட்டக்காரர்களின் வசமாகியிருக்கின்றது. போராட்டக்காரர்கள் தொடர்ந்தும் முன்னேறி வருவதான தோற்றம் தெரிகின்றது. அவர்களது நிபந்தனையும் கடுமையாக இருக்கின்றது. இந்த நிலையில், அடுத்து என்ன நடக்குமெனும் கேள்வியுடன் இலங்கையின் நாட்கள் எண்ணப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

ஒன்றில், போராட்டக்காரர்களின் நிபந்தனைகளுக்கு ரணில் இணங்க வேண்டும். அல்லது, இராணுவத்தை பயன்படுத்தி போராட்டக்காரர்களை அடக்கவேண்டும். இலங்கை இராணுவம் தெற்கில் இடம்பெற்ற ஜே.வி.பி கிளர்ச்சியின்போது, பல்லாயிரக் கணக்கான சிங்கள இளைஞர்களை அழித்ததாக குற்றச்சாட்டுக்கள் உள்ளன. அதேபோன்று, விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தமும் பல்லாயிரக்கணக்கானவர்களின் அழிவுடதான் முடிவுக்கு வந்தது.

ஆனால், இப்போதைய நிலைமை வேறு. இன்றைய போராட்டக்காரர்கள் என்போர், கையில் ஒரு கல்லுக்கூட இல்லாதவர்கள். ஆங்காங்கே சில அரசியல்வாதிகளின் சொத்துக்கள் எரிக்கப்பட்டதற்கு அப்பால், வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்படவில்லை. குறிப்பாக, இராணுவத்துடன் அவர்கள் எந்தவொரு முரண்பாட்டுக்கும் இதுவரையில் செல்லவில்லை. அதேவேளை, இலங்கையில் மக்கள் அமைதி வழியில் சர்வாதிகார ஆட்சியாளர்களுக்கு எதிராக போராடிவருவதாக சர்வதேச ரீதியில் நோக்கப்படுகின்றது. இந்த நிலையில் இராணுவத்தை முழு அளவில் பயன்படுத்த முடியுமா என்னும் கேள்வியுண்டு.

போராட்டக் காரர்களின் கோரிக்கைக்கு இணங்கினால் ரணில் பதவி விலகுவதே ஒரே வழியாகும். ஆனால், ரணில் பதவி விலகுவதற்கான வாய்பிருப்பதாக தெரியவில்லை. பதவி விலகும் எண்ணம் இருந்திருந்தால் பதில் ஜனாதிபதி பொறுப்பை அவர் ஏற்றிருக்கமாட்டார். இந்த நிலையில் நிலைமைகள் மேலும் சிக்கலடைகின்றன. அதேவேளை, போராட்டக்காரர்களும் தெளிவான இலக்குடன் செயற்படுவதாக தெரியவில்லை. அவர்கள் முன்வைக்கும் கோரிக்கைகள் சில நடைமுறைக்கு பொருத்தமற்றவையாக இருக்கின்றன. அதாவது, பாராளுமன்றத்திற்கு வெளியில் ஒரு மக்கள் அதிகார மையம் உருவாக்கப்படவேண்டுமென்று அவர்கள் கூறுகின்றனர். அந்த அதிகார மையம்தான், பாராளுமன்றத்தை வழிநடத்தும் என்றும் கூறுகின்றனர்.

இவ்வாறானதோர் அதிகார மையத்தை எவ்வாறு சட்ட ரீதியில் உருவாக்குவது? அரசியலமைப்பில் அதற்கான ஏற்பாடு இல்லாதபோது, அதனை எவ்வாறு முன்னெடுப்பது. அடுத்தது. போராட்டக்காரர்கள் ஆறு மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட்டு, புதிய அரசாங்கத்திற்கு வழிவிடவேண்டுமென்று கூறுகின்றனர். அவ்வாறானதொரு தேர்தலை நடத்த வேண்டுமாயின் பொருளாதார நெருக்கடி ஆகக் குறைந்தது ஜம்பது விகிதமாவது நிவர்த்தி செய்யப்படவேண்டும். அவ்வாறாயின், தற்போதுள்ள அரசாங்கத்திற்கு பொருளாதார நெருக்கடிகை சரிசெய்வதற்கு அவகாசம் வழங்கப்படவேண்டும். இவைகள் எதுவுமில்லாமல் ரணிலையும் எதிர்ப்பது, சர்வகட்சி அரசாங்கத்தையும் எதிர்ப்பதென்றால் அடுத்த கட்டம்தான் என்ன?

மொத்தத்தில், ஒன்றில் மீட்சி, இல்லாவிட்டால் சர்வ நாசமென்னும் நிலைமையை நோக்கி நாடு நகர்கின்றது. இந்தச் சூழலில், தமிழ் மக்கள் என்ன செய்வதென்று சிந்திக்க வேண்டும்?

# ‘பட்டுப்பாதையில் பட்டொளி’ வீசி பறந்த காலத்துக்கு ஆப்பு !

- அனந்த பாலகிட்ணர் -

அதிவிசேட பயணிகளின் பாவனைக்கென்று பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ஒதுக்கப்பட்டுள்ள பகுதியே பட்டுப்பாதை என அழைக்கப்படுகின்றது. இங்கே வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பிரமுகர்கள் விரைவாகவே தமது பிரயாண ஆவணங்களை பூர்த்தி செய்து விமானத்தில் ஏறுவதற்கான அனைத்து வசதிகளும் பட்டுப்பாதை பகுதியிலுள்ள அலுவலர்களால் செய்து கொடுக்கப்படுகின்றன.

பெரும்பாலும் விமானத்தின் அதி விசேட பயணிகள் இருக்கைப்பகுதியில் பயணிப்போருக்கே பட்டுப்பாதை என்றழைக்கப்படுகின்ற பகுதியூடாக சேவைகள் துரிதமாக வழங்கப்படுகின்றன.

இலங்கையின் அரச தலைவர்கள் , பிரமுகர்கள் ஆகியோர் பெரும்பாலும் பட்டுப்பாதை வழியாகவே விமானத்தினுள் ஏறிக்கொள்வர். ஆனால் இத்தடவை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரரான பஷில் ராஜபக்ஷ ஆகியோர் நாட்டை விட்டு வெளியேற முயற்சித்தபோது அங்கு கடமையாற்றும் அலுவலர்களால் புறக்கணிக்கப்பட்டனர். அவர்கள் நாட்டை விட்டு வெளியேறிச்செல்வதற்கான ஆவணங்களை சரிபார்த்து அவர்களது பயணத்தை தொடருவதற்கு ஒத்துழைக்க பட்டுப்பாதை அலுவலர்கள் மறுத்திருந்தனர்.

இதன்மூலம் முன்பு ஆட்சியதிகாரத்திலிருந்தபோது விமான நிலைய பட்டுப்பாதை வழியாக கம்பீரத்துடன் சென்று வந்த ராஜபக்ஷ தரப்பினரின் கொட்டம் அடக்கப்பட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது. இதன் காரணமாக அமெரிக்கா செல்லும் தமது நோக்கத்தை கைவிட வேண்டிய நிப்பந்தத்துக்கு பஷில் ராஜபக்ஷ உள்ளானார். மறுபுறத்தே நேற்றைய தினம் வரை ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ தமது அதிகாரத்தை பயன்படுத்தி விமானப்படையின் ரஷ்ய தயாரிப்பு அன்ரனோவ் விமானத்தில் தமது பாரியார் மற்றும் இரு பாதுகாப்பதிகாரிகள் சகிதம் மாலைதீவுக்கு பயணமானார்.

கடந்த மே மாதம் கொழும்பு காலிமுகத்திடலில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமானபோது அதுகுறித்து எதனையும் பெரிதாக அலட்டிக்கொள்ளாது அரச தரப்பு காணப்பட்டிருந்தது. ஆனால் ஓர் அரசியல் ஷஆழிப்பேரலை“ என்று குறிப்பிடுமளவுக்கு கடந்த 9-ந்திகதி ஜனாதிபதி செயலகத்தினுள் ஆர்ப்பாட்டக்காரர்கள் முதலில் பிரவேசித்தனர். இதன்பின்னர் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தினுள் அவர்கள் பிரவேசித்தனர்.

நேற்று மாலைதீவை கோட்டாபய சென்றடைந்தபோது அந்நாட்டின் ஜனாதிபதி இல்லத்துக்கு வெளியேயும் அங்குள்ள இலங்கையர்கள் கோட்டாபய ராஜபக்ஷவை



ஏற்றுக்கொள்ள வேண்டாமென ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஜனாதிபதி பதவியிலிருந்தும் விலகுவதாக அறிவித்துள்ள கோட்டாபய ராஜபக்ஷ, தமது கடமைகளை இனிமேல் பிரதமராக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க அரசியல் அமைப்பின் பிரகாரம் கவனித்துக்கொள்வார் என்று கடிதமூலம் அறிய தந்திருந்தார். இதனையடுத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சட்டம் ஒழுங்கை கையாளும் விதத்தில் நேற்றைய தினம் தனது முதலாவது பணியாக ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்தியுள்ளார்.

இருந்தபோதிலும் ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதமர் அலுவலகம் மற்றும் ஏனைய முக்கிய அலுவலகங்கள் முன்பாக நேற்றைய தினமும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்தனர். இந்த ஆர்ப்பாட்டங்களில் பொலிஸ் தரப்பிலும் ஆர்ப்பாட்டம் நடத்தியோர் தரப்பிலும் பலர் காயமடைந்திருந்தனர்.

பாதுகாப்பு படையினரும் பொலிஸாரும் ஆர்ப்பாட்டக்காரர்களை கட்டுப்படுத்த முற்பட்ட போதிலும் அவர்கள் பிரதமர் அலுவலகத்தினுள்ளேயும் புகுந்திருந்தனர்.


இத்தகைய பின்னணியில் ஆர்ப்பாட்டங்களை பொறுத்தவரை ‘மழை ஓய்ந்தும் தூவானம் ஓயாத’ நிலையே தற்போது கொழும்பில் நிலவுகின்றது.

தற்போதைய உடனடி தேவைகளாக சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதும், பொருளாதார ரீதியான மேம்பாட்டை துரிதப்படுத்த வேண்டியதுமே அவசியமானதாகின்றது. ‘கோ கோட்டா கோ’ ஆர்ப்பாட்டத்தின் ஆவேசத்தை நன்கறிந்த பிரதமர் ரணிலோ அல்லது பாதுகாப்பு தரப்பினரோ கடுமையான நடைமுறைகளை சட்டம் ஒழுங்கை கையாள இனிமேலும் பிரயோகிப்பார்களேயானால் நிலமை மேலும் மோசமடையும் என்றே கருத முடியும்.

எனவே ஆர்ப்பாட்டக்காரர்களோடு கெடுபிடிகளற்ற நிலைப்பாடுகளுடன் பேச்சுக்களை நடத்துவதன் மூலமே நிலமைகளை சுமுகமாக கையாள முடியும்.

இதுவிடயத்தில் புத்தி ஜீவிகள் மற்றும் அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட விதத்தில் சிரேஷ்ட அரசியல் வாதிகள் மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் உடனடியாக உரிய பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து செயலில் இறங்குவதே காலத்தின் தேவையாக இருக்கின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு

| | |
|---|---|
| ஜுலை - 14 | வியாழக்கிழமை |
| சுபகிருது வருடம் - | ஆனி 30 |
| நல்ல நேரம் : | 10.30 - 12.00 |
| ராகு காலம் : | 01.30 - 03.00 |
| திதி : | பிரதமை |




**மேடம்**
நிதிநிலையை சரிசெய்வீர்கள்.எதிர்பார்ப்பு நிறைவேறும். உங்கள் அணுகுமுறையால் நினைத்ததை அடைவீர்கள்.வரவேண்டிய பணம் வசூலாகும். குடும்பத்தில் இருந்து வந்த நெருக்கடி விலகும்.

**இடபம்**
சில எதிர்ப்புகளால் உங்கள் செயல் தள்ளிப்போகும். விழிப்புணர்வு தேவை.அரசு வழி முயற்சிகளில் கவனம் அவசியம். சட்ட ரீதியாக சங்கடம் ஏற்படலாம்.வீண் அலைச்சலும் செலவுகளும் அதிகரிக்கும்.

**மிதுனம்**
எதிர்பார்ப்பு நிறைவேறும். மகிழ்ச்சியான செயல் நடைபெறும்.உறவினர்களின் ஆதரவால் நேற்றைய முயற்சி ஒன்று நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.

**கடகம்**
மறைமுக சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உங்கள் செயலில் முன்னேற்றம் காண்பீர்கள்.நீங்கள் மேற்கொள்ளும் செயலில் வெற்றியாகும். உங்கள் செல்வாக்கு உயரும். நன்மை அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்**
சொத்துகளில் ஏற்பட்ட சிக்கலை பெரியோரின் ஆதரவுடன் பேசி தீர்ப்பீர்கள்.உறவினர்களிடம் ஏற்பட்ட மனக்கசப்பு விலகும். விலகிச் சென்றவர் மீண்டும் வந்து இணைவர்.எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**கன்னி**
தாய்வழி உறவினரின் ஆதரவால் செயலில் லாபம் காண்பீர்கள்.எதிர்பார்த்த குழந்தை பேறுக்கான நல்ல தகவல் வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.நேற்றைய எண்ணம் ஒன்று நிறைவேறும்.

**துலாம்**
குடும்ப உறவினர் ஒருவரால் இன்று சங்கடம் ஏற்பட்டு மறையும். எச்சரிக்கை தேவை. நண்பர்களுடன் கவனமாக பழகுங்கள். மற்றவர் செய்யும் தவறுக்கு நீங்கள் ஆளாகலாம்.வருமானம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்**
கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். பெரியோரின் ஆலோசனையால் குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னை விலகும். பணிபுரியும் இடத்தில் உங்கள் ஆலோசனைகளுக்கு மதிப்பு அதிகரிக்கும்.

**தனுசு**
உங்கள் மனம் தனிமையை விரும்பும். செயல்களில் குளறுபடி உண்டாகும்.மற்றவர்களால் உங்களைப் புரிந்து கொள்ள முடியாமல் போகும். நிதானமுடன் செயல்பட வேண்டும்.எண்ணப்படி செயல்படுவீர்கள்.

**மகரம்**
வரவுகளை விட செலவு அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கலில் நிதானம் தேவை.மற்றவர்களுக்காக நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி நிறைவேறும். உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும்.

**கும்பம்**
முயற்சி பலிக்கும் நாள். எதிர்பார்த்த பணவரவு வந்து சேரும்.புதிய முயற்சி வெற்றியாகும். போட்டிகளை சமாளித்து வியாபாரத்தில் லாபம் காண்பீர்கள். நிதிநிலை உயரும்.

**மீனம்**
உறவினர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு அகலும். உங்கள் முயற்சி வெற்றியாகும்.தொழிலை விரிவு செய்வீர்கள். புதிய வேலையாட்களுக்கு வாய்ப்பு வழங்குவீர்கள்.உத்தியோகத்தில் உங்கள் திறமை வெளிப்படும்.

# இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி 28 ஆம் திகதி சென்னை வருகை

*சென்னை, ஜூலை. 14*

மாமல்லபுரத்தில் 44ஆவது சர்வதேச"செஸ் ஒலிம்பியாட்" போட்டி வருகிற 28 ஆம் திகதி தொடங்கி ஆகஸ்டு மாதம் 10ஆம் திகதி வரை நடைபெற உள்ளது. இதற்காக பூஞ்சேரியில் உள்ள "போர் பாயிண்ட்ஸ்" அரங்கத்தில் பிரம்மாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. இதில் 188 நாடுகளை சேர்ந்த செஸ் வீரர்கள், வீராங்கனைகள் உள்ளிட்ட 2,500க்கும் மேற்பட்டோர் பங்கேற்கின்றனர். போட்டியில் பங்கேற்க வருபவர்களுக்கு வரவேற்பு, விருந்தோம்பல், கலைநிகழ்ச்சி, தங்கும்வசதி, உணவு, உபசரித்தல், போக்குவரத்து, பாதுகாப்பு, நிறைவு விழா உள்ளிட்டவைகளை கவனிக்க தமிழக அரசு சார்பில் 18 குழுக்கள் அமைக்கப்பட்டு உள்ளது. அவர்கள் தீவிரமாக கண்காணித்து போட்டிக்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர். இந்நிலையில், நேரு விளையாட்டரங்கில் நடைபெற இருக்கும் செஸ் ஒலிம்பியாட் தொடக்க விழாவில் பிரதமர் மோடி கலந்துக்கொள்கிறார். செஸ் ஒலிம்பியாட் போட்டியை தொடங்கி வைப்பதற்காக பிரதமர் மோடி ஜூலை 28ஆம் திகதி சென்னை வருகிறார். 44ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டியின் தொடக்க விழாவில், பிரதமர் மோடி மற்றும் விளையாட்டு துறை அமைச்சர்கள் பங்கேற்கின்றனர். (அ)

# தமிழகம் முழுவதும் கமல் விரைவில் சுற்றுப்பயணம்

*சென்னை, ஜூலை. 14*

மக்கள் நீதி மய்யம் கட்சியின் செயற்குழு கூட்டம் ஆழ்வார்பேட்டையில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கட்சியின் மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய கமல் ஹாசன் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து மக்களை சந்திக்க இருப்பதாக அறிவிப்பு வெளியிட்டார்.

2024ஆம் ஆண்டு நடைபெற உள்ள பாராளுமன்ற தேர் தலை சந்திக்க இப்போதே தயாராக வேண்டும் என்று கட்சியினரை கேட்டுக் கொண் டுள்ளார்.

"சீரமைப்போம் தமிழகத்தை" என்கிற முழக்கத்தோடு பல கட்டங்களாக சுற்றுப் பயணம் மேற் கொள்ள இருப்பதாகவும், இந்த சுற்றுப்பயணத்தை கட்சியின் அடித்தளம் வலுவில்லாமல் இருக்கும் பகுதிகளில் இருந்து தொடங்க இருப்பதாகவும் கமல் ஹாசன் தனது பேச்சின் போது குறிப்பிட்டுள்ளார். இதையும் படியுங்கள்: அ.தி.மு.க. அலுவலகத்தை கடப்பாறையால் உடைத்து அராஜகம் செய்தவர் ஓ.பி.எஸ்.- கோகுல இந்திரா இந்த சுற்றுப்பயணத்தை எங்கிருந்து தொடங்கலாம் என்பது பற்றி கட்சியின் மாநில நிர்வாகிகள் கலந்து ஆலோசித்து திட்டமிட வேண்டும் என்றும் அறிவுறுத்தி உள்ளார். இதன் மூலம் கமல் ஹாசன் தனது அதிரடி அரசியல் சுற்றுப்பயணத்தை விரைவில் தொடங்க உள்ளதாக கட்சியின் மாநில நிர்வாகி ஒருவர் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் கூறும் போது, மக்கள் நீதி மய்யத்தின் மாநில நிர்வாகிகள் தற்போது வெளி மாவட்ட நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறார்கள். அடுத்த கட்டமாக தலைவர் கமல் ஹாசன் சுற்றுப் பயணம் செய்ய உள்ளார். இந்த பயணம் விரைவில் தொடங்கும். (அ)

# பழனிச்சாமிக்கு பலரும் வாழ்த்து

*சென்னை, ஜூலை. 14*

அ.தி.மு.க. இடைக்கால பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்ட எடப்பாடி பழனிசாமியை கட்சி நிர்வாகிகள் சந்தித்து வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். முன்னாள் அமைச்சர் கோகுல இந்திரா எடப்பாடி பழனிசாமியை சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

பொதுக்குழுவுக்கான தீர்ப்புக்காக அனைவரும் காத்து கொண்டு இருக்கின்ற சூழ்நிலையில் தீர்ப்பு வெளி வருவதற்கு முன்பே நீதிபதி என்ன சொல்ல போகிறார் என்று தெரிவதற்கு முன்பே வீட்டில் இருந்து ஓ.பன்னீர்செல்வம் தலைமை கழகத்துக்கு புறப்பட்டார். அவருடைய பாதுகாப்புக்கு வெளிமாவட்டங்களை சேர்ந்தவர்கள் தொடர்ந்து சென்றுள்ளனர். அவரது ஆதரவாளர்கள் உருட்டு கட்டை, கடப்பாறை போன்ற ஆயுதங்களை கொண்டு வந்துள்ளனர்.

நாமெல்லாம் கோவிலாக நினைக்கக்கூடிய கட்சி அலுவலகத்தை கடப்பாறை கொண்டு உடைத்து அராஜகம் செய்தவர். கட்சியை அழிக்க எல்லா வழிகளிலும் முயற்சி மேற்கொண்டு வருகிறார். சட்டம், ஒழுங்கு பிரச்சினையை ஏற்படுத்தி அலுவலகத்தை மூடியது சில்லறைத்தனமானது. ஓ.பி.எஸ். இந்த முறை தர்மயுத்தம் போட முடியவில்லை. ஒரு தலைவராக இருந்தவர் இதுபோன்ற அராஜக செயலில் ஈடுபட்டது, அவர் மீது இருந்த சிறிய அளவிலான மரியாதை கூட இல்லாமல் போனது. மறைந்த முதல் - அமைச்சர் ஜெயலலிதா இருந்து இருந்தால் தி.மு.க.விற்கு நல்லாட்சி சான்றிதழ் ரவீந்திரன் எம்.பி. கொடுத்து இருப்பாரா? இவ்வாறு அவர் கூறினார். (அ)

# கொரோனாவால் முதல்வரின் கோவை பயணம் ஒத்திவைப்பு

*சென்னை, ஜூலை. 14*

முதல்வருக்கு கொரோனா தொற்று பாதிப்பு ஏற்பட்டதன் காரணமாக, அவரது கோவை பயணம் ரத்து செய்யப்பட்டதால், கட்சிக்காரர்கள் பெரும் ஏமாற்றத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

முதல்வர் ஸ்டாலின், இன்று கோவை செல்வதாக இருந்தது. கோவை மற்றும் பொள்ளாச்சியில், இரண்டு நாட்கள் அரசு விழா மற்றும் கட்சி பொதுக்கூட்டங்களில் அவர் பங்கேற்பார் என்று கூறப்பட்டிருந்தது. இதற்கான ஏற்பாடுகள் நடந்து வந்த நிலையில், முதல்வருக்கு கொரோனாத் தொற்று பாதிப்பு ஏற்பட்டதன் காரணமாக, தேதி குறிப்பிடப்படாமல் முதல்வரின் பயணம் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

முதல்வரின் பயணம், தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டதில், கோவையிலுள்ள அரசுத்துறை அதிகாரிகள் நிம்மதியும், கட்சிக்காரர்கள் விரக்தியும் அடைந்துள்ளனர். அதற்குக் காரணங்கள் பல உள்ளன.தற்போதுள்ள நிலையில், கோவை மக்களிடம் தமிழக அரசின் மீது கடும் அதிருப்தி நிலவி வருகிறது.

சமீபத்தில், கோவை மாநகராட்சியில் சொத்து வரி பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது. அத்துடன் குப்பை வரியும் புதிதாகப் போடப்பட்டுள்ளது. நகருக்குள் மின்தடை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. கடந்த ஓராண்டில், மேட்டுப்பாளையம் பை-பாஸ், கோவை - பொள்ளாச்சி மாற்றுப்பாதைத் திட்டம், ஒருங்கிணைந்த பஸ் ஸ்டாண்ட் என பல திட்டங்களும் தமிழக அரசால் கைவிடப்பட்டு வருகின்றன. புதிய திட்டம் எதுவும் கோவைக்கு அறிவிக்கப்படவில்லை.

கோவைக்கு முதல்வர் வருவதற்குள் வீதிகளைச் சீரமைப்பது சாத்தியம் இல்லை அதே போன்று, கோவை மக்கள் எதிர்பார்க்கும் புதிய திட்டம் எதையும் அறிவிப்பதற்கும் வாய்ப்பிருப்பதாகத் தெரியவில்லை. இதனால், முதல்வர் வருகையை எப்படிச் சமாளிப்பது என்ற பதட்டத்தில், கோவையிலுள்ள அரசு அதிகாரிகள் இருந்தனர். அவரது வருகை ரத்தானதால், நிம்மதியடைந்துள்ளனர்.

(அ)

ஈழநாடு



# அரசியல் பதவியை நான் வகிக்க விரும்பவில்லை

## சாலிய பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை. 14

எந்தவொரு அரசியல் பதவியையும் வகிக்க விரும்பவில்லை என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பேஸ்புக் ஊடாக பதிவொன்றை வெளியிட்டு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பதில் ஜனாதிபதி பதவிக்காக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸை நியமிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரி மைத்திரி குணரத்ன, கீர்த்தி தென்னக்கோன் மற்றும் அசாத் சாலி ஆகிய முன்னாள் ஆளுநர்கள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ள நிலையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.



மேலும், சட்டத்தரணியாக கடந்த காலங்களில் சட்டத்தரணிகள் சங்கத்திற்கும் நாட்டிற்கும் முக்கியப் பங்காற்ற முடிந்ததாகவும், இந்த இக்கட்டான நேரத்திலும் அந்தப் பணியை தொடர்வதே தனது நோக்கம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)




# தனியார் பஸ் உரிமையாளர்கள் மன்னாரில் பணிப் புறக்கணிப்பு!

மன்னார், ஜூலை. 14

மன்னார் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர் எரிபொருள் கோரி நேற்று புதன்கிழமை பணிப் புறக்கணிப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர். இதனால் உரிய போக்குவரத்து வசதிகள் இன்றி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

மன்னார் தனியார் பஸ் சேவை, மற்றும் அரச போக்குவரத்து சேவையினருக்கும் இடையில் மேற்கொண்ட ஒப்பந்தத்துக்கு அமைவாக மன்னார் போக்குவரத்துச் சாலை தனியார் பஸ்களுக்கு வழங்க வேண்டிய டீசலை வழங்காத நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வீதிகளை மறித்து மன்னார் தனியார் பஸ் உரிமையாளர்கள் போராட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் குறித்த பிரச்னையில் தலையிட்டு நேற்று முன்தினம் மாலை 13,200 லீற்றர் டீசல் மன்னார் சாலைக்கு வழங்கிய நிலையில் மாவட்ட செயலகத்தினால் நிர்ணயிக்கப்பட்ட 5000 லீற்றர் டீசல் மன்னார் தனியார் சேவையினருக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.

இருந்த போதிலும் நேற்று முன்தினம் தனியார் பஸ்களுக்கு எரிபொருள் உரிய விதத்தில் கிடைக்காத நிலையில் நேற்று அவர்கள் முழுமையாக பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக உள்ளூர் மற்றும் வெளியூர் பிரயாணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டதுடன் அரச பஸ்களுக்காக நீண்ட நேரம் காத்திருந்ததுடன் அதிகளவான மக்களுடன் பயணங்களை மேற்கொள்ள வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

இந்த நிலையில் தனியார் பஸ் உரிமையாளர்களின் கோரிக்கைக்கு அமைவாக நேற்று மன்னார் போக்குவரத்து சாலையில் தனியார் பஸ்களுக்கான எரிபொருள் விநியோகிக்கப்பட்டதை அடுத்து இன்று தனியார் பஸ்கள் வழமை போன்று சேவைகளை மேற்கொள்ளும் என தெரிவிக்கப்பட்டது. (அ)

# அத்தியாவசிய சேவையை சீராக முன்னெடுக்க வவுனியா இ.போ.சபை சாலைக்கு 300 லீற்றர் பெற்றோல் விநியோகம்

வவுனியா, ஜூலை. 14

இலங்கை போக்குவரத்துச் சபையின் அத்தியாவசிய சேவையை சீராக முன்னெடுப்பதற்காக அரசாங்க அதிபரின் அனுமதியுடன் பெரல்களில் 300 லீற்றர் பெற்றோல் வழங்கப்பட்டது.




வவுனியா இலங்கை போக்குவரத்துச் சாலையில் 161 தொழிலாளர்கள் கடமையாற்றுவதுடன், அவர்களது தனிப்பட்ட வாகனங்களில் கடமைக்கு செல்வதற்கு எரிபொருள் இன்மையினால் பஸ் சேவைகளை சீரான முறையில் நடைமுறைப்படுத்துவதில் பல்வேறு அசௌகரியங்களை முகங்கொடுத்திருந்ததுடன், எரிபொருள் கோரி கடந்த சில தினங்களுக்கு முன்னர் எரிபொருள் கோரி போராட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர்.

இ.போ.சபை வவுனியா சாலையினால் அரசாங்க அதிபருக்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைவாக 161 தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கென 400 லீற்றர் பெற்றோல் வழங்குமாறு அரசாங்க அதிபர் அனுமதி வழங்கியிருந்தார்.

இந்நிலையில் வவுனியா, பண்டாரவன்னியன் சதுக்கம் பகுதியில் உள்ள ஐஓசி எரிபொருள் நிலையத்தில் நேற்று முன் தினம் இ.போ.சபை வவுனியா சாலைக்கு பரல்களில் 300 லீற்றர் பெற்றோல் வழங்கப்பட்டிருந்தது.

இ.போ.சபை வவுனியா சாலை சாரதிகள், காப்பாளர்கள், பொறியலாளர்கள், உத்தியோகத்தர்கள் செட்டிகுளத்திலிருந்து அல்லது அதற்கு அண்மையிலுள்ள பிரதேசத்திலிருந்து வருகின்றனர். அது மட்டுமில்லாமல் சாளம்பைக்குளம், பம்பைமடு, நாகர்இலுப்பைக்குளம், ஓமந்தை, பூனாவ, இராசேந்திரகுளம், வீரபுரம், பூவரசன்குளம், சிதம்பரபுரம், முருகனூர் போன்ற இடங்களிலிருந்து வருகின்றார்கள். இதைவிட யாழ்ப்பாணம், கிளிநொச்சி, பருத்தித்துறை இடத்திலிருந்தும் கிழக்கு மாகாணத்திலிருந்தும் வந்து கடமை செய்கின்றார்கள்.

அத்துடன் பாடசாலை சேவை, தபால் சேவை, பொது மக்களுக்கான சேவை மற்றும் காரியாலய உத்தியோகத்தர்கள் சேவை என்பன இ.போ.ச. வவுனியா சாலையினர் முன்னெடுத்துள்ளனர். இதனை கருத்தில் கொண்டே பரல்களில் எரிபொருள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அமெரிக்க தூதரகம் பூட்டு!

கொழும்பு, ஜூலை. 14

இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் தமது சேவைகளை அடுத்த இரண்டு நாட்களுக்கு ரத்துச் செய்துள்ளது.

மிகுந்த எச்சரிக்கையுடன், தூதரகம் புதன்கிழமை பிற்பகல் சேவைகளையும் (அமெரிக்க குடிமக்கள் சேவைகள் மற்றும் என்.ஐ.வி பாஸ்பேக்) மற்றும் வியாழக்கிழமையின் அனைத்து தூதரக சேவைகளையும் ரத்து செய்வதாக தூதரகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஏற்படும் எந்தவொரு சிரமத்திற்கும் தாம் மன்னிப்பு கேட்டுக்கொள்வதாகவும், மேலும் ரத்து செய்யப்பட்ட அனைத்து சந்திப்புகளையும் மீண்டும் திட்டமிடவுள்ளதாகவும் அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது. (அ)

# ரயில் சேவை ரத்து

கொழும்பு, ஜூலை. 14

கொழும்பிற்குள் செல்லும் அனைத்து ரயில்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

மேல் மாகாணத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ள நிலையில், ரயில் திணைக்களம் இந்த நடவடிக்கை எடுத்துள்ளது. (அ)

# கோட்டாவின் இராஜினாமா கடிதம் இன்னும் எனக்கு கிடைக்கவில்லை

## சபாநாயகர் மஹிந்த யாப்பா தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை. 14



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இராஜினாமா கடிதம் இன்னும் தமக்கு கிடைக்கவில்லை என்றும், கடிதம் கிடைத்தவுடன் நாட்டுக்கு உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிடுவேன் என்றும் சபாநாயகர் நேற்று நண்பகல் தெரிவித்தார்.

கடந்த 9 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று தனது பதவியை இராஜினாமா செய்வதாக சபாநாயகரிடம் தெரிவித்திருந்தார்.

அதன்படி, உரிய இராஜினாமா கடிதம் கிடைத்தவுடன், அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படும் என்றும் சபாநயகர் தெரிவித்துள்ளார். (அ)

# ஒரு மாதத்தின் பின் வவுனியாவில் நேற்று 1000 பேருக்கு லிற்றோ எரிவாயு விநியோகம்

வவுனியா, ஜூலை. 14

ஒரு மாதத்திற்கு பின்னர் வவுனியாவில் 1000 பேருக்கு சீரான முறையில் லிற்றோ சமையல் எரிவாயு நேற்று வழங்கப்பட்டது.

வவுனியா, மூன்றுமுறிப்பு பகுதியில் உள்ள மைதானத்தில் வைத்து குறித்த சமையல் எரிவாயு வழங்கப்பட்டது.

லிற்றோ நிறுவனத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து அங்கு வருகை தந்திருந்த மக்கள் 1000 பேருக்கு சீரான முறையில் எந்தவித குழப்பங்களுமின்றி இலக்க சிட்டைகளை வழங்கி, பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் மின்சாரப் பட்டியல்கள் பதிவு செய்யப்பட்டு சமையல் எரிவாயு 1000 பேருக்கு விநியோகிக்கப்பட்டது.



இதேவேளை, வவுனியாவில் ஒரு மாதத்திற்கு பின்னர் லிற்றோ சமையல் எரிவாயு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கையில் பொருளாதார, அரசியல் திருத்தம் அவசர கதியில் மேற்கொள்ளப்படுதல் அவசியம்!

## வலியுறுத்துகின்றார் கனடா வெளியுறவு அமைச்சர்



**கொழும்பு, ஜூலை 14**

**இலங்கையில் அவசர கதியில் பொருளாதார மற்றும் அரசியல் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என கனடா வலியுறுத்தியுள்ளது. ஜூலை 09 நடைபெற்ற அரசுக்கு எதிரான மக்கள் கிளர்ச்சி குறித்து கருத்து வெளியிட்ட கனேடிய வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலி இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.**

அமைதி வழியில் முன்னெடுக்கப்படும் பொருளாதார மற்றும் அரசியல் சீர்திருத்தங்களுக்கு கனடா ஆதரவளிக்கும் எனவும் ருவிட்டரில் மெலனி ஜோலி குறிப்பிட்டுள்ளார்.!

ஜூலை 9 ஆம் திகதி இடம்பெற்ற மக்கள் கிளர்ச்சியின் போது ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் ஜனாதிபதி செயலகம் என்பன மக்களால் கைப்பற்றப்பட்டு அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன.

அத்துடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்துக்கும் ஒரு குழு தீவைத்தது. இந்தப் போராட்டங்களை அடுத்து ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ பதவி விலக சம்மதித்தார். நேற்று ஜூலை 13 பதவி விலகுவதாக அறிவித்த ஜனாதிபதி, அதற்கு முன்னதாக நேற்று அதிகாலை நாட்டைவிட்டு வெளியேறி மாலைதீவை சென்றடைந்தார்.

அத்துடன், சர்வ கட்சி அரசமைக்க ஏதுவாக பதவி விலகத் தயார் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அறிவித்துள்ளார்.

இந்நிலையில் மக்களின் போராட்டங்கள் சிறப்பான இலங்கைக்கான மக்களின் விருப்பத்தின் தெளிவான அறிகுறியாக இருந்ததாக கனேடிய வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலி கருத்து வெளியிட்டுள்ளார்.

அத்துடன், ஊடகவியலாளர்கள் மற்றும் அமைதியான முறையில் எதிர்ப்பை வெளிப்படுத்தும் போராட்டக்காரர்கள் மீதான தாக்குதலைக் கண்டித்த அவர், அமைதியாகப் போராடுவதற்கான மக்களின் உரிமைகள் சிலைநாட்டப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். (அ)

---

# பிரதமர் இராஜினாமா செய்வதே பொருத்தம்

## மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 14

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது பதவியை இராஜினாமா செய்வதே பொருத்தமானது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கங்காராம விகாரையில் இடம்பெற்ற சமய நிகழ்வில் கலந்து கொண்டு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மைத்திரிபால சிறிசேன இவ்வாறு கூறினார்.

மேலும், நாட்டில் தொடர்ந்து அராஜகம் செய்யாமல் பிரதமர் பதவியை விட்டு விலக வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

---

# உள்நாட்டு துப்பாக்கி ஒன்றை பரிசோதித்த போது விபரீதம்!

## 27 வயது இளைஞர் ஒருவர் காயம்

கொழும்பு, ஜூலை 14

மூவர் இணைந்து ஏற்பாடு செய்திருந்த விருந்தின்போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றை பரிசோதிக்க முற்பட்டபோது இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ள சம்பவம் பதிவாகியுள்ளது.

உரகஸ்மன்ஹந்திய, கோரகீன பிரதேசத்தில் துப்பாக்கியொன்று இயங்கியதில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த விபத்து நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

கோரகீன பிரதேசத்தில் மூன்று பேர் இணைந்து விருந்து ஒன்றை ஏற்பாடு செய்துள்ளனர்.

அந்த இடத்திற்கு வந்து நபர் ஒருவரால் கொண்டுவரப்பட்ட உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியை பரிசோதித்தபோது துப்பாக்கி இயங்கியதில் ஒருவர் காயமடைந்து எல்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

காயமடைந்த நபர் மேலதிக சிகிச்சைக்காக கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக உரகஸ்மன்ஹந்திய பொலிஸார் தெரிவித்தனர்.

கோரகீன, உரகஸ்மன்ஹந்திய பிரதேசத்தில் வசிக்கும் 27 வயதுடைய இளைஞன் ஒருவரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

சம்பவ தொடர்பில் துப்பாக்கி மற்றும் துப்பாக்கியை கொண்டு வந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், உரகஸ்மன்ஹந்திய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

---

# கடவுச்சீட்டு பெற்றுத்தருவதாக கூறி பண மோசடி; கண்டியில் மூவர் கைது!

கொழும்பு, ஜூலை 14

கண்டியில் கடவுச்சீட்டு பெற வரும் இளைஞர்களுக்கு ஒரு நாள் மற்றும் சாதாரண சேவையின் கீழ் வெளிநாட்டு கடவுச்சீட்டு தயாரித்து தருவதாக கூறி அவர்களிடம் இருந்து 50,000 ரூபா வரை பணம் பெற்றதாகக் கூறப்படும் அந்த அலுவலகத்தின் முன்னாள் ஊழியர் ஒருவர் மற்றும் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் சில விண்ணப்பங்களை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொண்டு பணத்திற்கு விற்பனை செய்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஒரு நாள் சேவையின் கீழ் வெளிநாட்டு கடவுச்சீட்டை தயாரிப்பதற்காக 40,000 முதல் 50,000 ரூபா வரையிலும், சாதாரண சேவையின் கீழ் கடவுச்சீட்டைத் தயாரிப்பதற்காக 6000 ரூபா வரையிலும் சந்தேக நபர்கள் பெற்றுள்ளதாக இந்த விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

ஒரு நாள் சேவையின் கீழ் வெளிநாட்டு கடவுச்சீட்டை தயாரிப்பதற்காக தெஹியத்த கண்டிய பிரதேசத்தைச் சேர்ந்த யுவதி ஒருவரிடம் 25,000 ரூபாவை முற்பணமாக பெற்றுக் கொண்ட போது இளைஞர்கள் குழுவொன்றினால் மூன்று சந்தேக நபர்கள் பிடிபட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

---

# பாராளுமன்றத்தின் பாதுகாப்பை பலப்படுத்த விசேட நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 14

பாராளுமன்றத்தின் பாதுகாப்பை பலப்படுத்த பாதுகாப்பு தரப்பினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதற்காக இராணுவ கமாண்டோக்கள் குழுவொன்று வரவழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கொழும்பில் உள்ள பிரதமர் அலுவலகத்திற்கு அருகில் இடம்பெற்ற அமைதியின்மையை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

---

# ஜனாதிபதி, பிரதமர் மாளிகைகளிலிருந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் வெளியேறவேண்டும்

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 14

ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரி மாளிகையில் உள்ள சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதாக வெளியாகும் செய்திகள் தொடர்பில் மிகுந்த அவதானம் செலுத்துவதாகவும், இந்த கட்டடங்களின் பொறுப்பு உரியவர்களிடம் ஒப்படைக்கப்படுவதை உறுதி செய்யுமாறு அங்குள்ள மக்களிடம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு குறித்த சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை, ஜனாதிபதி செயலகம் ஆகிய இடங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆக்கிரமித்துள்ள நிலையில், அங்கு பெருமளவான மக்கள் நாளாந்தம் வந்து செல்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பல ஆவணங்கள் மற்றும் பிற பொதுச் சொத்துகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும், இந்தக் கட்டடங்களின் முக்கியத்துவத்திற்கு மதிப்பளிக்குமாறும் சட்டத்தரணிகள் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

சட்டத்தரணிகள் சங்கம் சுமூகமான மற்றும் அமைதியான அதிகார மாற்றத்திற்கான தனது கோரிக்கையை மீண்டும் வலியுறுத்துவதாகவும், கட்சித் தலைவர்கள் பின்பற்றும் விரைவான தீர்வு நடவடிக்கைகளை வரவேற்பதாகவும் அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது. (அ)

---

# ஜனாதிபதியாக பதவியேற்க முயற்சிக்கின்றார் ரணில்!

## ஜே.வி.பி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 14

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மக்களின் கோரிக்கைக்கு மாறாக ஜனாதிபதியாக பதவியேற்க முயற்சிப்பதாக ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது.

நாட்டை மேலும் அமைதியின்மைக்கு ஆளாக்காமல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவி விலகலை சமர்ப்பிக்கும் முன்னர் ரணில் விக்கிரமசிங்க, தமது பதவி விலகலை சமர்ப்பிக்க வேண்டும் என ஜே.வி.பி வலியுறுத்தியுள்ளது.

பிரதமர் விக்ரமசிங்க ஜனாதிபதியாக வருவதற்கு முயற்சிப்பது நாட்டில் அமைதியின்மையை மோசமாக்கும் என்று ஜே.வி.பியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தற்போது சகல துறைகளும் முடங்கியுள்ளன. அதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமரின் பொறுப்பு உள்ளது. எனவே மக்களின் கோரிக்கைக்கு பிரதமர் செவிசாய்த்து இனி எந்த நெருக்கடியையும் தவிர்க்க வேண்டும் என்றும் அனுரகுமார கேட்டுள்ளார். (அ)

# வன்முறையால் எதையும் சரி செய்துவிட முடியாது!

## பதில் ஜனாதிபதி விசேட உரை



கொழும்பு, ஜூலை. 14
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டிலிருந்து வெளியேறி சென்றதும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சில குழுக்கள் பிரதமர் அலுவலகத்தை கைப்பற்றவும், ஜனாதிபதிக்கு விமானம் வழங்கிய விமானப்படை தளபதி மற்றும் கடற்படைத் தளபதி ஆகியோரின் வீடுகளுக்குள் நுழைந்து சேதம் விளைவிப்பதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக புலனாய்வுத் தகவல் கிடைத்தாக பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

விசேட ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்து கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்றுக்குள் நுழையவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் திட்டமிடப்பட்டிருந்ததாக தகவல்கள் வெளியாகின. இதனையடுத்து சபாநாயகர் உடனடியாக பாதுகாப்புத் தரப்பினருடன் கலந்துரையாடலை மேற்கொண்டு பாராளுமன்றத்திற்கான பாதுகாப்பை பலப்படுத்தினார்.

ஜனாதிபதி திட்டமிட்டவாறு இன்றைய தினம் (நேற்று) தமது இராஜினாமா கடிதத்தை சபாநாயகரிடம் கையளிப்பதாக உறுதியளித்துள்ளார். எனவே இனியும் இவ்வாறு வன்முறைகளில் ஈடுபடவேண்டாமென கேட்டுக்கொள்கிறேன். எந்தவொரு பிரச்சனைக்கும் வன்முறை தீர்வாகாது.

இந்நிலையில், நாட்டில் இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களை கட்டுப்படுத்துவதற்காக பாதுகாப்பு பிரிவினரின் ஆலோசனைக்கு அமைவாக அவசரகால சட்டத்தை அமுல்படுத்தினேன், ஊரடங்கு உத்தரவையும் பிறப்பித்தேன். ஒரு ஜனநாயக நாட்டில் ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம் உள்ளிட்டவற்றை ஆர்ப்பாட்டக்காரர்கள் கைப்பற்றி இருப்பதென்பது ஏற்றுக்கொள்ள முடியாததொன்றாகும்.

எவ்வாறாயினும், இவற்றை கைப்பற்றி வழமைக்கு கொண்டு வருவருமாறு பாதுகாப்பு பிரிவினருக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும், அதற்காக தேவையான பலத்தை பயன்படுத்துமாறும் அறிவுறுத்தியுள்ளேன். எனவே, உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு பாதுகாப்பு பிரிவினர் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (அ)



# ரணிலும் விலகவேண்டும்!

## போராட்டக் குழுவினர் நிபந்தனை

கொழும்பு, ஜூலை. 14
ஜனாதிபதி பதவி விலகும் போது, பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் பதவி விலகவேண்டும் என்று போராட்டக்குழுவினால் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

காலி முகத்திடல் போராட்டக்களத்தின் பிரதிநிதிகளுக்கும், சகல அரசியல் கட்சி மற்றும் தொழிற்சங்க உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் சந்திப்பொன்று இடம்பெற்றிருந்தது.

இதன்போது, போராட்டக்காரர்களால், போராட்டத்தின் செயற்பாட்டுத் திட்டம் முன்வைக்கப்பட்டிருந்தது. இதில் பல்வேறு கோரிக்கைகளும் நிபந்தனையும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதன்படி உடனடியாக இடைக்கால அரசாங்கம் ஒன்றை நியமித்து, மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த இடைக்கால அரசாங்கம் ஒரு வருடத்துக்கு மட்டுமே ஆட்சியில் இருக்க முடியும். மேலும் மக்களின் குறுங்கால அடிப்படை பிரச்சனைகளுக்கு 6 மாதங்களுக்கு தீர்வு காணப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் ராஜபக்ஷவினர் அல்லது ராஜபக்ஷவினரை பாதுகாக்க முனைவோருக்கு மீண்டும் பதவிகள் வழங்கப்படக்கூடாது.

தற்போது நடைமுறையில் இருக்கும் அரசாங்கம் உடனடியாக பதவி விலகி இடைக்கால அரசாங்கத்துக்கு வழிவிடவேண்டும்.

போராட்டங்களின் போது கைதானவர்கள் உள்ளிட்ட அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும் போன்ற பல நிபந்தனைகளை போராட்டக் குழுவினர் அறிவித்துள்ளனர். (அ)

# ஜனாதிபதி மாளிகையில் இருந்த தொல்பொருள் சின்னங்கள் சேதம்

கொழும்பு, ஜூலை. 14
ஜூலை 9ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக கொழும்பில் உள்ள ஜனாதிபதி மாளிகை உள்ளிட்ட தொல்பொருள் நினைவுச் சின்னங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக தொல்பொருள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த இடங்களில் உள்ள புராதன மற்றும் கலாசாரப் பொருட்கள் மேலும் அழிந்து போவதையோ அல்லது காணாமல் போவதையோ தடுப்பதற்கு விசேட கவனம் செலுத்தியுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அனுர மனதுங்க தெரிவித்துள்ளார்.

அந்த இடங்களில் உள்ள பெறுமதிமிக்க பொருட்களை பாதுகாக்க கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட அதிகாரிகள் ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் மற்றும் அலரி மாளிகைக்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். (அ)

# காலிமுகத்திடல் போராட்ட களத்தில் இரண்டு குழுக்கள் இடையே மோதல்!

கொழும்பு, ஜூலை 14
காலிமுகத்திடல் போராட்டக் களத்தில இரு குழுக்களிடையே இடம்பெற்ற மோதலில் 4 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரவித்தனர்.

இவர்கள் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு - 15 மற்றும் வெல்லம்பிட்டி முதலான பகுதிகளைச் சேர்ந்த *15, 17, 18* மற்றும் 20 வயதுடைய இளைஞர்களே காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பதில் ஜனாதிபதியாக ரணிலின் நியமனத்தை ஏற்கவேமுடியாது

## வசந்த முதலிகே தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை. 14
பதில் ஜனாதிபதியாக ரணில் நியமிக்கப்பட்டுள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாது என அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவினால் அமுல்படுத்தப்பட்டுள்ள அவசரக்காலச் சட்டத்தை நாய்கூட மதிக்காது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவசரக்காலச் சட்டத்தை பொருட்படுத்த வேண்டாம் எனவும் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்தார்.

அத்துடன், ரணிலும் பதவி விலக வேண்டுமென்றே மக்கள் போராடுகிறார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# அப்பாபிள்ளை அமர்தலிங்கத்தின் 33 ஆவது நினைவு பண்ணாகத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை. 14
இலங்கை பாராளுமன்றின் முதலாவது தமிழ் பேசும் எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அப்பாபிள்ளை அமர்தலிங்கத்தின் 33 ஆவது நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் - பண்ணாகத்தில் அமைந்துள்ள அமரரின் உருவச் சிலைக்கு சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்து மலர் தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

பண்ணாகம் கிராம அபிவிருத்தி மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நினைவு நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், வலி - மேற்கு பிரதேச சபை தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன், பிரதேசபை உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு அன்னாருக்கு அஞ்சலி செலுத்தினர்கள்.

அமரர் அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் அவர்கள் சுட்டுக் கொல்லப்படும்போது தமிழர் விடுதலைக் கூட்டணியில் தலைவராக செயற்பட்டு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# அமைச்சரவை கூடவில்லையெனில் அரச ஊழியர்களுக்கு சம்பளமில்லை

கொழும்பு, ஜூலை. 14
தற்போதைய நிலவரத்தை கருத்தில் கொண்டு அரச ஊழியர்களுக்கு இம்மாதம் உரிய திகதியில் சம்பளம் வழங்குவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பளம் வழங்குவதற்கு பணம் அச்சிடப்பட வேண்டியமையே இதற்கான காரணமாகும். மேலும், அதற்கான அமைச்சரவை தீர்மானம் எடுக்கப்படவேண்டும்.

இதற்காக, பதில் ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்கவை நியமித்து தற்போதுள்ள அமைச்சரவையின் அவசர அமைச்சரவைக் கூட்டத்துக்கு அழைத்து உரிய தீர்மானத்தை எடுப்பதே ஒரே தெரிவாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், ரணில் விக்ரமசிங்க பிரதமர் பதவியில் இருந்து விலகினால் அமைச்சரவை கலைக்கப்படும் எனவும், அதற்கமைய, உரிய தீர்மானத்தை எடுப்பதற்கு, மீண்டும் பிரதமரையும் அமைச்சரவையையும் நியமிக்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அவசர அமைச்சரவைக் கூட்டத்தை கூட்டினால் மட்டுமே, இம்மாதம் 25ஆம் திகதிக்குள் அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க முடியுமெனவும் கூறப்படுகிறது.

அமைச்சரவையின் முடிவு நாணயச் சபைக்கு அனுப்பப்பட்ட பின்னர் பணத்தை அச்சிடுவதற்கு சட்டப்பூர்வமான அனுமதி வழங்கப்படும்.

மேலதிக நேரம், விடுமுறை நாட்கள், வாழ்க்கைச் செலவுகள் என சகல கொடுப்பனவுகளையும் தவிர்த்து சம்பளத்திற்கு மாத்திரம் மாதாந்தம் தேவைப்படும் தொகை சுமார் *29 பில்லியன்* ரூபா என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# அதிமுகவின் அதிகார மாற்றம் எவ்வளவு காலம் நீடிக்கும்?

சமஸ்



**சென்னை**, ராயப்பேட்டை அவ்வை சண்முகம் சாலையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகம் மீண்டும் உயிர் பெற்றிருப்பதைப் பார்க்க முடிகிறது. ஒரு வருஷமாக சூனியத்தில் உறைந்தது போல இருந்த கட்சி இப்போதுதான் உடம்பை அசைத்திருக்கிறது என்று சொல்கிறார்கள் கட்சிக்காரர்கள். அலுவலகத்தை ஒட்டியுள்ள புகைப்படக் கடைகள் சுவாரஸ்யமானவை. தொண்டர்களின் வருகையை நம்பி வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் இந்தக் கடைகளுக்குக் கட்சியின் போக்கை முன்கூட்டி அறிவிக்கும் வல்லமை உண்டு. அநேகமாக எல்லாக் கடைகளிலுமே ஓ.பன்னீர்செல்வத்தின் புகைப்படங்கள் மறைந்திருந்தன. எம்ஜிஆர், ஜெயலலிதா படங்களைக் காட்டிலும் எடப்பாடி பழனிசாமியின் முகம் நிறைந்த சிரிப்பை வெளிப்படுத்தும் படங்கள் பெரிய அளவில் ஆக்கிரமித்திருக்கின்றன.

அதிமுக முழுமையாகப் பழனிசாமியின் கைகளுக்குள் வந்துவிட்டதா? "ஆமாம், இப்போதைக்கு அப்படித்தான்"என்கிறார்கள் எல்லோரும்.

எம்ஜிஆர், ஜெயலலிதா மாதிரி எல்லோருக்குமான தலைவராக பழனிசாமி இனியேனும் மாறுவாரா? ஒரு காலகட்டத்துக்கேனும் கட்சியைக் கட்டி இழுத்து முன்னோக்கி நகர்த்துவாரா? முக்கியமாக, தமிழகத்தின் இரண்டு பிரதான கட்சிகளில் ஒன்று பெரிய கட்சி என்கிற இடத்தில் அதிமுகவைத் தக்கவைப்பாரா?

இந்தக் கேள்விகளுக்கு யாரிடமும் தெளிவான பதில் இல்லை. தீர்க்கமான நம்பிக்கையும் இல்லை. சொல்லப்போனால், பழனிசாமியின் தலைமை மீதான நம்பிக்கையைக் காட்டிலும் பன்னீர்செல்வத்தின் மீதான அவநம்பிக்கை பட்டவர்த்தனமாக வெளிப்படுகிறது. பன்னீர்செல்வத்தின் வீழ்ச்சிதான் பழனிசாமியின் எழுச்சி!

### பள்ளத்துக்குள் கட்சி

இந்த ஓராண்டில் அதிமுகவுக்கு ஏற்பட்ட பெரும் பின்னடைவுக்குத் திமுக தந்த தோல்வியைக் காட்டிலும், பாஜக ஆடும் ஆட்டம் முக்கியமான காரணம் என்ற எண்ணம் அதிமுக தொண்டர்களிடம் இருக்கிறது. தமிழக அரசியல் களமானது என்றைக்கு அதிமுக உருவானதோ அன்று முதலாக திமுக, அதிமுக எனும் இரண்டு சக்திகளையே மையம் கொண்டு சுற்றுவது இந்த ஓராண்டில் முதல்முறையாக பாஜக அந்த இடத்தை ஆக்கிரமித்து விட்டது என்றே அதிமுகவினர் பலரும் எண்ணுகிறார்கள்.

கட்சியின் பொறுப்பைக் கையில் வைத்திருந்த ஒருங்கிணைப்பாளர்கள் -பழனிசாமி, பன்னீர்செல்வம் இருவருமே இதற்குக் காரணம். இரட்டைத் தலைமை எனும் சூழல் இருவருமே சுதந்திரமாகச் செயல்பட முடியாத அழுத்தத்தை உண்டாக்கி இருந்தது. இருவரும் ஒருவரையொருவர் நம்பவில்லை. திமுகவுடன் நேரடியாக ஈடுபட வேண்டிய யுத்தம் ஒரு நிர்ப்பந்தம் என்றால், பாஜவுடன் திரை மறைவில் பராமரிக்க வேண்டிய அணுக்கம் இன்னொரு நிர்ப்பந்தம். கட்சியோ இதற்கு இடையில் ஊருக்கு ஊர் இரட்டைப் பிளவுக்கு ஆளாகிக்கொண்டிருந்தது. இதனால் கட்சி பெரிய பள்ளத்துக்குள் சென்றுவிட வேண்டியிருந்தது.

### பன்னீர்செல்வத்தின் வீழ்ச்சி

பன்னீர்செல்வம் இதற்கு பிரதான காரணமாக இருந்தார் என்கிற எண்ணம் கட்சிக்குள் பலரிடமும் இருக்கிறது. ஏனென்றால், பாஜகவோடு அவர் கூடுதல் அணுக்கமாக இருந்தார். அவருடைய மகனும் மக்களவை உறுப்பினருமான ரவீந்திரநாத் தன்னுடைய செயல்பாடுகள் வழியே பாஜக காரர் போன்ற தோற்றத்தை உருவாக்கியிருந்தார். பன்னீர்செல்வம் நினைத்தால் எந்நேரத்திலும் பாஜகவோடு இணைந்து கட்சிக்குள் ஒரு கவிழ்ப்பை நடத்தலாம் எனும் அச்சம் பழனிசாமி தரப்புக்கு இருந்தது.

கட்சிக்குள் பன்னீர்செல்வத்தால் பெரிய பலன்கள் ஏதும் இல்லை. தனக்குரிய பங்கைக் கேட்பவராக மட்டும் அவர் இருந்தார். அதற்கு மேல் அவருக்கு எந்தத் திட்டமும் இல்லை. யாருக்கும் எதற்காகவும் பேசுபவராகவும் அவர் இல்லை.

இதற்கெல்லாம் அப்பாற்பட்டும் அதிமுகவினருக்குப் பன்னீர்செல்வத்தின் மீது அபிமானமும் எதிர்பார்ப்பும் இருந்தன. ஜெயலலிதாவால் 'விசுவாசி' என்று அடையாளம் காட்டப்பட்டவர். மூர்க்கமான அரசியல் போக்கில் இருந்து விலகி நிற்பவர் மாநிலம் முழுவதாலும் அறியப்பட்டவராக அதேசமயம், பழனிசாமியைப் போல ஒரு பிராந்தியம்சார் - ஒரு சாதிசார் அரசியலுக்குள் அடைத்துவிட முடியாதவராக இருப்பவர் என்ற மதிப்பீடுகள் இதன் பின்னணியில் இருந்தன. ஜெயலலிதா மறைவுக்குப் பின் குறுகிய காலம் முதல்வராக இருந்தபோதும், பதவியைவிட்டு விலகியபோதும் அவருக்கு இருந்த மக்கள் செல்வாக்கைப் பலர் இன்னமும் பெரியதாகப் பேசுகின்றனர்.

உண்மையில் தேர்தல் தோல்விக்குப் பின் அதிமுகவுக்குள் அதிருப்திப் புகைமூட்டம் சூழ்ந்திருந்தது. கட்சியை ஒரு சமூக, பிராந்திய ஆதிக்கத்துக்குள் முழுமையாகக் கொண்டு சென்றுவிட்டார். தேர்தல்களை வெல்லும் வல்லமையும் பழனிசாமியிடம் இல்லை என்ற எண்ணம் பலரிடமும் இன்றும் இருக்கிறது. சமூகரீதியாகக் கட்சிக்குள் பல தலைவர்கள் பிளவுபட்டிருந்தனர். வெளிப்படையாகவே விமர்சனக் குரல்கள் கேட்டன. மேலும் எம்ஜிஆர், ஜெயலலிதா என்று கவர்ச்சிகரத் தலைவர்களால் வழிநடத்தப்பட்டுவந்த கட்சியின் தலைமையிடத்தில் அமரத்தக்க மக்கள் செல்வாக்கு பழனிசாமியிடம் இல்லை.

ஒப்பீட்டளவில் இந்த விஷயங்கள் எல்லாவற்றிலுமே மேம்பட்டவராகப் பன்னீர்செல்வத்தைப் பலரும் பார்த்தனர்.

ஜெயலலிதாவுக்குப் பிந்தைய காலகட்டத்தில் பழனிசாமி, பன்னீர்செல்வம் இருவரும் கட்சித் தலைமை பதவியைச் சமமாகப் பகிர்ந்துகொண்டாலும், ஆட்சியில் முதல்வர் எனும் பகாசுர அதிகார பலம் பழனிசாமிக்கு இருந்தது. நான்கு ஆண்டுகளில் பழனிசாமியைக் கடந்து செல்ல முடியாத அழுத்தத்தை இது பன்னீர்செல்வத்திடம் உண்டாக்கியிருந்தது.

திமுகவிடம் ஆட்சியை அதிமுக பறிகொடுத்த பிறகான காலகட்டம் பன்னீர்செல்வம் இறங்கி ஆடுவதற்கான தோதான வாய்ப்பாக அமைந்தது. இந்த ஓராண்டு காலத்தில் கட்சியில் தன் கையை அவர் உயர்த்திக்கொண்டிருக்க முடியும். அவர் முற்றிலுமாக வீணடித்தார். பன்னீர்செல்வத்தின் செயலின்மையைப் பழனிசாமி பயன்படுத்திக்கொண்டார்.

### பழனிசாமியின் முன்னகர்வுகள்

பழனிசாமி ஏற்கெனவே தேர்தல் தோல்விக்கு பிந்தையச் சூழலை கணித்து, தயாராக இருந்தார் என்று சொல்லலாம். பாஜக மற்றும் பாமகவுடன் அவர் அமைத்த கூட்டணியானது ஒட்டுமொத்த மாநில அளவில் அதிமுகவுக்குப் பெரும் பாதிப்பை உண்டாக்கினாலும், பழனிசாமி சார்ந்த கொங்கு பிராந்தியத்திலும் அவர் எதிர்பார்த்த நல்ல பலனைத் தந்தது. சட்டமன்றத்தில் கட்சி இன்று கையில் வைத்திருக்கும் 64 இடங்களில் மூன்றில் இரண்டு பங்குக்கும் மேலான இடங்கள் அவருடைய விசுவாசிகளால் நிறைந்தது. எஞ்சிய ஒரு பங்கு இடமும்கூட பன்னீர்செல்வத்தின் விசுவாசிகளால் நிறைந்தது என்று சொல்வதற்கு இல்லை.

கட்சியினருக்குப் பணத்தை வாரி இறைக்க பழனிசாமி தயங்கவில்லை. அதிமுகவைப் பொருத்த அளவில் இது மிக முக்கியமான ஒரு விஷயம். கட்சியின் வரவு செலவானது, கட்சித் தலைமையால் பெருமளவில் நிர்வகிக்கப்படும் கட்சி அது. ஜெயலலிதா மறைந்தபோது கூவத்தூரில் நடந்த பேர அரசியல் கூத்துகளுக்குப் பணத்தைக் கொட்டியதன் வழியாகவே பழனிசாமி தன்னை முதல்வர் பதவி நோக்கி நகர்த்திக்கொண்டார். ஆட்சியிலும், சம்பாத்தியத்தைப் போலவே செலவும் நடந்தது. ஆட்சியை இழந்த காலகட்டத்திலும் அது தொடர்கிறது.

இரு தலைமை என்றாலும், தன்னுடைய விசுவாசிகள் என்று அடையாளப்படுத்தப்பட்ட ஒரு கூட்டத்தைப் பராமரித்து ஊக்குவித்தார் பழனிசாமி. பன்னீர்செல்வத்தால் அவரை நம்பி வந்த எவரையும் பாதுகாக்க முடியவில்லை. தலைமையகத்தில் அவர் கண் முன்னாலேயே அவருடைய ஆதரவாளர்கள் வேட்டையாடப்பட்டனர். பன்னீர்செல்வத்தை நம்பி பிரயோஜனம் இல்லை என்ற இடத்துக்கு எல்லோரும் வந்தனர். உச்சகட்டமாக தன்னுடைய பலத்தை மோதிக்காட்ட வேண்டிய பொதுக்குழுக் கூட்டத்தை எதிர்கொள்ளும் திராணி இன்றி நீதித்துறையை நாடினார். இது கட்சிப் பதவியிலிருந்து மட்டுமல்லாமல், கட்சியிலிருந்தே நீக்கப்படுவதற்கான சூழலை அவரே உருவாக்கிக் கொண்டதாக அமைந்தது. இப்போதைக்கு முழுமையாகவே பழனிசாமி கைகளுக்குள் கட்சி வந்துவிட்டது என்றே சொல்ல வேண்டும். அதிகாரபூர்வமாக மட்டும் அல்ல உணர்வபூர்வமாகவும். அதேசமயம், பழனிசாமி அதை உத்தரவாதப்படுத்திக் கொள்வது அவ்வளவு எளிதான காரியமாக இருக்காது.

### வண்டி எங்கே போகும்?

அடுத்த இரண்டாண்டுகளுக்குள் கட்சியை மக்களவைத் தேர்தலுக்குப் பலப்படுத்த வேண்டிய சவால் பழனிசாமியின் முன் உள்ளது. அதிமுக ஆட்சியில் இருந்தபோது ஒரு முதல்வராக தன்னுடைய பிம்பத்தை நிலைநிறுத்திக் கொள்வதில் பழனிசாமி வென்றார். ஆனால், தொடர் கூட்டங்கள், போராட்டங்கள், கணிசமான வெற்றிகள் என்று தன்னைச் சுற்றியே அரசியல் சுழலும் வகையில் துடிப்பான ஓர் எதிர்க்கட்சித் தலைவராக எழுந்து நின்றார் ஸ்டாலின். திமுகவை இதன் வழியாகவே தன் கைக்குள் முழுமையாகக் கொண்டுவந்தார்.

திமுக ஆட்சிக்கு வந்த பிந்தைய ஓராண்டில், தமிழகத்தின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தன்னிடம் வைத்துள்ளபோதும் இன்றுவரை பழனிசாமி அதில் சோபிக்கவில்லை. சொல்லப்போனால், பாஜகவின் அண்ணாமலை அதிகம் பேசப்படுபவராக இருக்கிறார். மேலும், உள்ளாட்சி தேர்தல், சட்டமன்ற தேர்தல், மக்களவை தேர்தல் மூன்றிலுமே கட்சியின் முந்தைய இடத்தைப் பழனிசாமி பறிகொடுத்திருக்கிறார். திமுக சென்ற ஓராண்டில் அமைப்பு ரீதியாகவோ, மக்கள் மத்தியிலோ தன்னை வெகுவாகப் பலப்படுத்திக்கொள்ளவில்லை என்றாலும், முதல்வர் ஸ்டாலின் தன்னுடைய செல்வாக்கைத் தேசிய அளவில் பேசப்படும் அளவிற்கு உயர்த்திக்கொண்டிருக்கிறார். பாஜகவின் ஏனைய மாநில அனுபவங்களின் வரலாற்றோடு, ஒப்பிட்டு கணக்கிட்டால் 2024 மக்களவைத் தேர்தலுக்குப் பின் தமிழ்நாட்டில் அதன் வியூகம் தாறுமாறாக ஏறும். அதிமுகவை அது அணுகும் விதம் முற்றிலுமாக மாறும். அதிமுகவின் இடத்தை கைப்பற்றுவதன் வாயிலாகவே 2026 சட்டமன்றத் தேர்தலில் பிரதான எதிர்க்கட்சிகளில் ஒன்றாகும் அதன் இலக்கை நோக்கி பாஜக நகர முடியும். அதிமுகவை உண்டு செரிக்கும் வியூகத்தைப் பன்னீர்செல்வத்திடமிருந்தேகூட அது ஆரம்பிக்கலாம். ஆக, திமுகவைக் காட்டிலும் பாஜகவை எப்படி பழனிசாமி எதிர்கொள்ளப்போகிறார் என்பதே அவரைத் தலைமையிடத்தில் தக்க வைக்கும்.

இதை யதார்த்த நோக்கில் அதிமுகவினர் நன்றாகவே புரிந்துகொண்டிருக்கின்றனர். "எப்போதுமே மத்திய கட்சி - மாநிலக் கட்சி என்று இரண்டு ஆளும் வண்டிகளுக்கு நடுவில் எதிர்க்கட்சியாக முந்தி ஓடி வரும் வண்டிதான் தமிழ்நாட்டில் அடுத்து ஆட்சிக்கு வர முடியும். முடிந்தால் பழனிசாமி காளைகளை அடித்து ஓட்டி, வண்டியை முந்தி ஓட்டி வரட்டும். இல்லாவிட்டால் அப்படி ஓட்டி வரக் கூடிய ஒருவர் இவரைத் தள்ளிவிட்டு சுக்கானைக் கையில் பிடிப்பார். இப்போதைக்கு வண்டி ஓடட்டும்" என்கிறார்கள்.

அரசியலில் எதுவுமே நிரந்தரம் இல்லை என்பது ஜெயலலிதாவின் ஆப்த வாக்கியம்.

சரிதான்!

# இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் உத்தேச கூட்டமைப்புக்கு இந்தியா தலைமைதாங்க வேண்டும்

## தோல்விகண்ட பொருளாதாரத்துக்கு உதவி செய்து உலக அரங்கில் மதிப்பைக் கெடுத்துக்கொள்ள சீனா விரும்பவில்லை



இலங்கை பொருளாதார நெருக்கடி குறித்து பொருளாதார நிபுணர் கலாநிதி கணேசன் விக்னராஜா



கடன் நெருக்கடியில் திணறிக்கொண்டிருக்கும் இலங்கைக்கு உதவுவதில் சீனா ஒரு திரிசங்கு நிலையில் இருக்கின்ற அதேவேளை, ஏனைய உலக நாடுகளும் ஐயவுணர்வைக் கொண்டிருக்கின்றன. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து உதவி கிடைப்பதற்கும் காலம் எடுக்கும் என்பதால் உத்தேச உதவி வழங்கும் நாடுகள் கூட்டமைப்புக்கு (Aid Consortium) தலைமை தாங்குவதன் மூலம் பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கையை மீட்டெடுப்பதில் இந்தியா அதன் பங்கை ஆழமாக்கமுடியும் என்று சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட ஆய்வாளரான கலாநிதி கணேசன் விக்னராஜா கருத்து வெளியிட்டிருக்கிறார்.

இலங்கையுடன் ஆழமான பிணைப்புக்களைக் கொண்ட பொருளியல் நிபுணரான அவர் இலங்கைக்கான தெரிவுகள் குறுகிக்கொண்டுவருகின்றன என்றும் இலங்கையை நெருக்கடியில் இருந்து மீட்பது இந்தியாவின் நலன்களுக்கு உகந்தது எனறும் குறிப்பிட்டிருக்கிறார். தற்போதைய மனிதாபிமான மற்றும் உதவு உறவுகளுக்கு அப்பால் வாணிப மற்றும் முதலீட்டு உறவு முறைகளை இந்திய ஆழமாக்கமுடியும் என்றும் அவர் கூறுகிறார்.

தொடர் கடன்கள் (Credit lines), தவணைக் கடன்கள் (term loans) மற்றும் கடன் மீள்செலுத்துகை தாமதிப்பு (Deffered loans ) என்ற கூட்டு முறைகளில் இலங்கைக்கு இவ்வருடம் சுமார் 350 கோடி டொலர்கள் வழங்கியதன் மூலம் இலங்கையை மீட்பதற்கான முயற்சிகளில் முதலில் இறங்கிய நாடாக இந்தியா விளங்குகிறது. ஆனால், இலங்கை எரிபொருட்களைப் பெறுவதற்கு வசதியாக அமைந்த தொடர்கடன்கள் ஜூனில் ஒரு முடிவுக்கு வந்ததால் எரிபொருட்கள் கையிருப்பு தீர்ந்துபோனதையடுத்து நாடு ஒரு ஸ்தம்பிதநிலைக்கு வந்திருக்கிறது.

தொடர்ந்து வீழ்ச்சி கண்டுவரும் பொருளாதாரத்தை ஓரளவுக்கேனும் கண்ணியமான ஒரு தளத்துக்கு கொண்டுவந்து வளர்ச்சியை மீண்டும் முடுக்கிவிடுவதற்கு அடுத்த மூன்று வருடங்களுக்கு இலங்கைக்கு குறைந்த பட்சம் 2000 - 2500 கோடி டொலர்கள் தேவைப்படுகிறது என்று கலாநிதி விக்னராஜா மதிப்பிட்டிருக்கிறார்.



பொருளாதாரம் தொடர்ச்சியாக வீழ்ச்சி கண்டுபோகின்ற அதேவேளை ஆயிரக்கணக்கானவர்கள் தொழில் வாய்ப்புக்களை இழக்கக்கூடியதாகவும் இலட்சக்கணக்கானவர்கள் வறுமைக்குள் தள்ளப்படக்கூடியதாகவும் கடுமையான பணவீக்கத்துடன் கூடிய பொருளாதார மந்தநிலைக்குள் இலங்கை சிக்கக்கூடும் என்று அவர் அச்சம் தெரிவிக்கிறார்.

"இலங்கையின் பொருளாதாரத்தை உறுதி நிலைப்படுத்துவது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் "அயலகத்துக்கு முதலிடம்" என்ற கொள்கைக்கு பெரிய வெற்றியாக அமைய முடியும். இவ்வருடம் இலங்கைக்கு இந்தியா வழங்கிய உதவியே அது எந்தவொரு நாட்டுக்கும் வழங்கியிருக் கக்கூடிய மிகப்பெரிய இருதரப்பு உதவியாகும்.

"இதை விடவும் மேலும் கூடுதலான அளவுக்கு இந்தியாவினால் இலங்கைக்கு உதவமுடியும் என்று நான் நினைக்கிறேன். இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் உத்தேச கூட்ட மைப்புக்கு இந்தியா தலைமை தாங்க முடியும். அதன் மூலமாக சர்வதேச நாணய நிதியத்துடனும் ஏனைய நட்பு நாடுகளுடனும் ஒன்றிணைந்து அடுத்த மூன்று வருடங்களுக்கு இலங்கைக்கு 2000 -2500 கோடி டொலர்கள் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

"உதவிகளைப் பெறுவதில் இலங்கை உண்மையில் பெரும் சிக்கலை எதிர்நோக்கியிருக்கிறது. உலகின் வறிய நாடுகளில் 60 சதவீதமானவை ஏதோ ஒரு வகையில் கடன் நெருக்கடியில் சிக்கியிருக்கின்றன. பல தசாப்தங்களாக விலைவாசி அதிகரித்து வருவதற்கு மத்தியில் உலகளாவிய பொருளா தார மந்தநிலை ஏற்படக்கூடிய ஆபத்தும் இருக்கிறது. அதனால் உலகின் ஏனைய நாடுகள் இலங்கைக்கு ஆதரவளிப்பதில் கடுமையான மட்டுப்பாடுகள் ஏற்படலாம்.

"பலவீனமான ஆட்சிமுறை மற்றும் தவறான பொருளாதார முகாமைத்து வம் ஆகியவற்றின் விளைவாக இலங்கை தனக்கு தானே இன்றைய நெருக்கடி நிலையை ஏற்படுத்திக்கொண்டு கடன்களை மீளச்செலுத்த முடியாமல் வங்குரோத்து அடைந்திருக்கும் நிலையில் இலங்கை போன்ற தோல்வி கண்ட ஒரு பொருளாதாரத்தை மீட்டெடுக்க இன்னொரு நாட்டின் வரியிறுப்பாளர்கள் ஏன் முன்வர வேண்டும் என்ற கேள்வியும் எழுகிறது.

"நெருங்கிய நட்பு நாடாக இருக்கின்ற போதிலும் இலங்கையை மீட்டெடுப்பதில் சீனா ஒரு இக்கட்டான நிலையை எதிர்நோக்குகிறது. ஏனென்றால் இலங்கைக்கு இன்றைய கட்டத்தில் உதவினால், உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரமாக விளங்கும் சீனாவிடம் கடனைப்பெற்று கடன் நெருக்கடியில் உள்ள நாடுகள் கடன் மறுசீரமைப்பைச்



செய்யுமாறு வரிசையில் வந்துநிற்கும் என்று பெய்ஜிங் நினைக்கிறது. அதனால் இலங்கைக்கு உதவுவது தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்திவிடும் என்று சீனர்கள் கருதுகிறார்கள். மறுபுறத்தில் தோல்வி கண்ட பொருளாதாரம் ஒன்றுக்கு உதவுவதன் மூலம் உலக அரங்கில் தனது பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தவும் சீனா விரும்புவதாக இல்லை.

"இலங்கையின் கடன்களை ஒரு தலைப்பட்சமாக மறுசீரமைப்பு செய்தால் அல்லது கடனை மீளப்பெறுவதை தற்காலிகமாக இடைநிறுத்தினால் தனது கடன் வழங்கும் நடைமுறைகளில் தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்துவதாக இருக்கும் என்று சீனா விசனப்படுகிறது. சீனாவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட மண்டலமும் பாதையும் செயற்திட்டத்தின் (Belt and Road Initiative) கீழான திட்டங்களுக்கு பெருமளவு கடனுதவிகளைப் பெற்ற நாடுகள் இலங்கைக்கு செய்ததைப் போன்று தங்களுக்கும் செய்யுமாறு கேட்டு வரிசையில் வந்து நிற்கும் என்பது சீனர்களின் கவலை.

"சீனாவுக்கு இரண்டாவது பிரச்சினையொன்றும் இருக்கிறது. உலகின் இரண்டாவது பெரிய பொருளாரமான சீனா அமெரிக்காவுக்கு போட்டியாக இயங்குகிறது. தோல்வி கண்ட பொருளாதாரமொன்றுக்கு உதவுவதன் மூலமாக தனது பெயரைக் கெடுத்துக் கொள்ள சீனா விரும்பாது. பெய்ஜிங்கைப் பொறுத்தவரை இது முக்கியமான ஒரு மதிப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினையாகும். அத்துடன் கொரோனா வைரஸ் பெருந்தொற்றின் விளைவான பாதிப்புக்களினால் சீன பொருளாதாரமும் பிரச்சினைகளை எதிர்நோக்கி வளர்ச்சியில் பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது.

"பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கக்கூடிய உதவியே இலங்கைக்கு தற்போதைக்கு இருக்கக்கூடிய ஒரே தெரிவு. ஆனால் அது கிடைப்பதற்கு காலம் எடுக்கும். சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஒளிவுமறைவற்ற முறையிலும் நம்பகத்தன்மையுடனும் செயற்பட்டு தனது பொருளாதாரத்தை நிலைபேறான ஒன்றாக மாற்றுவதில் உண்மையில் அக்கறையுடன் கடப்பாட்டைக் கொண்டிருப்பதாக உலகிற்கு இலங்கை காண்பிக்கவேண்டும்.


"இலங்கை ஏற்கெனவே 16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்தை நாடியிருந்தது. நிதியத்தினால் விதந் துரைக்கப்பட்ட கொள்கைகளை முறையாக பின்பற்ற கொழும்பு தவறியது. அதனால் இத்தடவை இலங்கை கடுமையான கண்காணிப்புக்கு உட்படக்கூடும். சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்துக்கு தேசிய கருத்தொருமிப்பைக் கட்டியெழுப்புவதும் முக்கியமானதாகும்.

"ஏனென்றால் சர்வதேச நாணய நிதியத்தை மறந்துவிட்டு நாம் மத்தலவில் வற்றாளம் கிழங்கு பயிரிடுவோம் என்று சொல்பவர்கள் இன்னமும் இருக்கிறார்கள். தற்போதைய நிதி நெருக்கடியில் இதுவெல்லாம் சரிவராது. வெளிநாட்டு உதவிகள் நேர்மையான முறையில் பகிரப்படுவதையும் அவ்வுதவிகள் வேறு நோக்கங்களுக்கு திசைதிருப்பப்படாதிருப்பதையும் உறுதிசெய்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தை பகிரங்கப்படுத்துவதுடன் கடுமையான ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவேண்டும்.

இலங்கை அணிசேரா வெளியுறவுக் கொள்கை யொன்றை பின்பற்ற வேண்டும்" என்று கலாநிதி விக்னராஜா இலங்கை மத்திய வங்கியில் நடத்தப்பட்ட இணையவழி கருத்தரங்கில் விளக்கிக் கூறினார்.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**18)** 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

**19)**  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..........................................

**20)** தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , ............. , ...........   ii) 18 , 15 , 12 , ............. , ...........

**21)** | 3, 9, 14, 6, 10, 12, | பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

.........................................................................

**22)** ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

.........................................................................................

**23)** ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

..................................................................

**24)** பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

..................................................................

**25)** 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ....................................................

**26)** **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

**27)** கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.......................................................

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



.......................................................

**29)** ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

.......................................................   (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30)** சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)    2)    3) 

**31)** வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி   2) இரணைமடுக்குளம்   3) பராக்கிரமபாகு சமுத்திரம்

**32)** உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டி எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்   2) உதிப்பு   3) உடலைத் தளர்த்தல்

**33)** தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்   2) வாளேந்திய சிங்கம்   3) நெற்கதிர்

**34)** பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976   2) 1851   3) 1815

**35)** வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு   2) இறப்பர், தாழம்பூ   3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6   2) 8   **19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130   2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745   **23.** 455
**24.** 1l 100ml / 1100ml   **25.** ரூபாய் 144.00
**26.** 1) 190   2) 100   3) 290
**27.** 15 : 30   **28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1   **31.** 2   **32.** 3
**33.** 2   **34.** 3   **35.** 2


கல்வி tv CHANNEL-1

**06.07.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

**06.07.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# அம்பாறை சிறிய வைத்தியசாலைகளில் அம்புலன்ஸ் சேவைகள் மட்டுப்படுத்தல்

அம்பாறை, ஜூலை. 14

நாட்டில் நிலவுகின்ற எரிபொருள் பற்றாக்குறை காரணமாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட சிறிய வைத்தியசாலைகளின் அம்புலன்ஸ் சேவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

எரிபொருள் பற்றாக்குறையினால் மின்சாரம் தடைப்படும் போது வைத்தியசாலைகளிலுள்ள ஜெனரேட்டர்களை பாவனைக்குட்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் சில வைத்தியசாலைகளின் அம்புலன்ஸ் சேவை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

ஆதார, மாவட்ட வைத்தியசாலைகளின் அம்புலன்ஸ் சேவைகள் நடைபெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார வைத்தியதிகாரி அலுவலகங்களுக்கு கிழக்கு மாகாண சபையினால் எரிபொருளுக்காக வழங்கப்படுகின்ற நிதி தற்பொழுது மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

பல நெருக்கடிகளுக்கு மத்தியில் சில சிறிய வைத்தியசாலைகளில் அத்தியாவசிய சேவைகளான கர்ப்பிணித் தாய்மார்களுக்கான கிளினிக்,சிறுவர்களுக்கான கிளினிக் போன்றவை வழமை போன்று இயங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயங்களை கருத்தில் கொண்டு பொதுமக்களுக்கான சுகாதார சேவையினை வழங்க வேண்டியுள்ளது. குறிப்பாக கர்ப்பவதியான தாய்மார்கள் சிறுபிள்ளைகளுக்கான கிளினிக்குகள் மற்றும் அவர்களுக்கான மாத்திரைகள் முறையாக வழங்குதல் போன்ற பல பிரச்னைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

கர்ப்பிணி தாய்மார்களை உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு மக்கள் பல சிக்கல்களை எதிர்கொள்வதோடு ஓரிரு மரணங்களும் சம்பவித்த துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

சுகாதார வைத்தியதிகாரி பிரிவிலுள்ள பொதுச் சுகாதார மாது,வாகன உரிமையாளர்கள் மற்றும் கிராம சேவக உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட பிரதேசங்களிலுள்ள மதத் தலைவர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் முச்சக்கர வண்டி சாரதிகள் ஆகியோருடன் கலந்துரையாடப்பட்டு சுகாதார குழுக்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

வாகன உரிமையாளர்கள் நெருக்கடியான இக்கால கட்டத்தில் அவசர நோயாளிகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் ஆகியோர்களை அருகிலுள்ள வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்வதற்கு முன்வருமாறு கேட்டுள்ளார். சில சுகாதார வைத்தியதிகாரி பிரிவுகளில் இவ் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் குறித்த வாகனங்களுக்கான எரிபொருளை வழங்குவதற்கு மாவட்ட அரசாங்க அதிபருடன் கலந்தரையாடி அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

இந்த நெருக்கடியான கால கட்டத்தில் அரசாங்கத்தை முழுமையாக நம்பி இருக்காமல் பொதுமக்களும் சில செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென கேட்டுள்ளார். (அ)



# 200 வருடம் பழமையான மரமொன்றில் தீ பரவல்!

மட்டக்களப்பு, ஜூலை. 14

மட்டக்களப்பு காத்தான்குடியில் நூறு வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்த மரமொன்றில் நேற்று முன் தினம் மாலை தீ பரவியதால் மரம் முற்றாக எரிந்துள்ளது.

காத்தான்குடி 6 ஆம் குறிச்சி அப்துல் ஜவாத் அலீம் வீதியிலுள்ள காத்தான்குடி ஜாமியுழ்ழாபிரீன் ஜூம் ஆ பள்ளிவாயல் மைய்ய வாடியிலேயே இந்த மரம் நின்றுள்ளது.

குறித்த மரத்தின் கிளைகள் அகற்றப்பட்ட நிலையில், நின்ற இம்மரத்தின் மீது தீ பரவல் ஏற்பட்டுள்ளது. தீயை பொதுமக்கள் அணைத்துள்ளனர்.எனினும் மரம் முற்றாக எரிந்துள்ளது

இதே போன்று இந்த மைய வாடியின் மற்ற பகுதியிலும் இன்னுமொரு மரத்திலும் தீ பரவல் ஏற்பட்டு அந்த மரமும் எரிந்துள்ளதாக அப்பகுதி பொதுமக்கள் தெரிவித்தனர். (அ)

# விகாரைக்கு புத்தகங்கள் வழங்கல்

திருமலை, ஜூலை. 14

திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு சீனக்குடா போதிராஜரஜ மகா விகாரையின் நூலகத்திற்கு புத்தகங்கள் வழங்கப்பட்டன.

திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் அமதோர அமரஜீவ, விகாரை பீடாதிபதி வணக்கத்திற்குரிய அலுதோய் சத்தாதிஸ்ஸ அமரபுர தர்ம ரக்ஷித நிக்காய வடக்கு மற்றும் கிழக்கு சங்கநாயக பௌத்த தேரருக்கு வழங்கினார். (அ)

# கதிர்காம பாதயாத்திரை குழுவினர் அம்பாறை ஆலயங்களுக்கு விஜயம்

மட்டக்களப்பு, ஜூலை. 14

யாழ் மாவட்டத்தில் இருந்து வருகை தந்துள்ள கதிர்காம பாதயாத்திரை குழுவினர் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு ஆலயங்களையும் தரிசித்து வருகின்றனர்.

யாழ்ப்பாணம் தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆயத்திலிருந்து கடந்த மாதம் புறப்பட்ட யாழ் மாவட்ட கதிர்காம பாதயாத்திரை குழுவினர் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பாண்டிருப்பு திரௌபதை ஆலயத்தை வந்தடைந்துள்ளனர்.

குறித்த பாதயாத்திரீகர்கள் திருகோணமலை, முல்லைத்தீவு, மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு பயணம் செய்து பின்னர் மட்டக்களப்பில் இருந்து ஒன்றரை மாதத்தின் பின்னர் குறித்த ஆலயத்திற்கு வந்தடைந்ததுடன் விசேட பூஜைகளிலும் பங்கேற்றிருந்தனர்.

கடந்த பல வருடங்களாக பாத யாத்திரைக்கு தலைமை தாங்கி சென்ற வேல்சாமி மகேஸ்வரன் அடியார்கள் இங்குள்ள பல ஆலயங்களில் தீப ஆராதனைகளை மேற்கொண்டு தொடர்ந்து பாதயாத்திரை அடியார்கள் விசேட பூஜையில் கலந்து கொண்டனர்.

மேலும் நேற்று யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து பயணித்த வேல்சாமி மகேஸ்வரன் கதிர்காம பாத யாத்திரைக் குழுவினர் தங்களது பாத யாத்திரையை அம்பாறை உகந்தைமலை முருகன் ஆலயத்தை நோக்கி ஆரம்பித்துள்ளனர்.



எதிர்வரும் 23 திகதி கதிர்காம காட்டுப்பாதை திறக்கப்படவுள்ள நிலையில் அதிகளவான பாதயாத்திரை பக்தர்கள் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் வருகை தந்த வண்ணம் உள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பிரச்சினை எரிவாயு உள்ளிட்ட பொது மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை பெற கடவுளை இம்முறை நாடி வந்துள்ளதாக பாதயாத்திரிகர்கள் குறிப்பிட்டனர். (அ)

# மட்டக்களப்பு விவசாயிகளுக்கு டீசல்

மட்டக்களப்பு, ஜூலை. 14

மட்டக்களப்பு நகர் ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தின் ஊடாக மூன்றாவது தடவையாக மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்கு 4000 லீற்றர் டீசல் வழங்கப்பட்டது.




அதற்கான விவசாயிகளின் பெயர்களையும் உரிய கண்டங்களையும் அறுவடைத் திகதியின் முன்னுரிமை அடிப்படையில் அதற்குப் பொறுப்பான துறைசார் அதிகாரிகளால் தீர்மானிக்கப்பட்டு, வாழைச்சேனை கமநல கேந்திர நிலையம், கிரான் கமநல கேந்திர நிலையம், மண்டபத்தடி கமநல கேந்திர நிலையம் அடங்கலான மூன்று ஏபிசிகளில் 4 கண்டங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் வழங்கப்பட்டது.

தொடர்ந்து வருகின்ற நாட்களிலும் முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகளுக்கு டீசல் வழங்குவதற்கு தயாராக உள்ளதாக மட்டக்களப்பு நகரிலுள்ள ஐ.ஓ.சி உரிமையாளர் தேசபந்து எம்.செல்வராஜா தெரிவித்துள்ளார்.

குறித்த எரிபொருள் நிலையத்தின் உரிமையாளர் ஏற்கனவே இரண்டு தடவைகளில் விவசாயிகளுக்கு முன்னுரிமையடிப்படையில் 3500 லீற்றர் டீசலினையும், 50 விவசாயிகளுக்கான பெற்றோலினையும் வழங்கியிருந்ததுடன், மாவட்ட விவசாயிகளிடம் நன்மதிப்பை பெற்றுள்ளது மட்டுமல்லாது தொடர்ச்சியாக விவசாயிகள் தமது நன்றியையும் பாராட்டினையும் தெரிவித்து வருகின்றனர். (அ)

# கூப்பன் மூலம் பெற்றோல் வழங்குவதற்கு நடவடிக்கை

திருமலை, ஜூலை. 14

திருகோணமலை - மொறவெவ பிரதேச மக்களுக்கு கூப்பன் மூலம் பெட்ரோல் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக பொதுமக்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் நேற்று முன் தினம் முதல் இன்று வரை ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் பதிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மோட்டார் சைக்கிள், ஒட்டோக்கள் மற்றும் கார்களை பதிவு செய்யும் நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், வாகன உரிமையாளர்கள் தங்களது வாகன உரிம பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதி போன்றவற்றை எடுத்துக் கொண்டு வருமாறும் ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் மோட்டார் சைக்கிள்களுக்கு 1000 ரூபாவுக்கும், மூன்று சக்கர வாகனங்களுக்கு 2500 ரூபாவுக்கும் மற்றும் கார்களுக்கு 5000 ரூபாவுக்கும் எரிபொருள் வழங்க தீர்மானித்துள்ளதாகவும் மொரவெவ பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. மேலும், மேற்குறிப்பிட்ட அறிவிப்பை தொடர்ந்து எரிபொருள் கூப்பனை பெற்று கொள்வதற்காக மக்கள் நீண்ட வரிசையில் நின்றனர். (அ)

# ஒருவருக்கே கொரோனா! நகரத்துக்கே ஊரடங்கு!!




பீஜிங், ஜூலை 14
சீனாவின் வுகேங்க் நகரில் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து அந்த நகரமே கடுமையான விதிகளுடன் முடக்கப்பட்டுள்ளது. இதனால், 3 இலட்சத்து 20 ஆயிரம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

சீனாவின் வுஹான் நகரில் முதன்முதலாக கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்தது. இதைத் தொடர்ந்து உலகம் முழுவதும் பரவியது. எனினும், சீனாவில் தொற்று முழுமையாக ஆரம்பத்தில் கட்டுப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், அங்கு மீண்டும் கொரோனா தொற்றின் ஒமைக்ரோன் திரிபு பரவி வருகின்றது. பல கட்டுப்பாடுகளை விதித்தும் தொற்றைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இதையடுத்து அங்கு மேலும் விதிகள் கடுமையாக்கப்பட்டுள்ளன.

இந்நிலையிலேயே வுகேங்க் என்ற நகரில் ஒரு நபருக்கு தற்போது கொரோனா பாதிப்பு ஏற்பட் டுள்ளது. இதனால் சுமார் 3 இலட்சத்து 20 ஆயிரம் மக்கள் வசிக்கும் அந்நகரத்திற்கு ஒட்டுமொத்தமாக ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நோய் பரவல் தடுப்பு நோக்கில் அந்நகரத்தை சேர்ந்த யாரும் வரும் வீட்டை விட்டு வெளியே வர அனுமதி இல்லை என அதிரடியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்நாட்டின் மிகப் பெரிய உருக்கு ஆலை இந்த வுகேங்க் நகரில் தான் உள்ளது என்பதால் உருக்கு ஏற்றுமதி பெருமளவில் பாதிக்கப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# முத்தரப்பு பேச்சுக்காக ஈரான் செல்கிறார் புடின்!

மொஸ்கோ, ஜூலை14

**ரஷ்யாவுக்கு ஈரான் ஆயுதங்களை வழங்குகிறது என்று அமெரிக்காவின் குற்றச்சாட்டுக்கு மத்தியில் முத்தரப்பு பேச்சில் பங்கேற்பதற்காக ரஷ்ய ஜனாதிபதி புடின் ஈரானுக்கு செல்லவுள்ளார்.**

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ளது. பல நகரங்களை ரஷ்ய படைகள் கைப்பற்றிய போதும் உக்ரைன் படைகள் போராடி வருகின்றன. உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்காக, ஐரோப்பிய நாடுகள் ஆயுதங்கள் மற்றும் உதவிகளை வழங்குகிறது.



இந்நிலையில், ரஷ்யாவுக்கு ஈரான் ஆயுத உதவி வழங்குவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ரஷிய அதிபர் விளாடிமிர் புடின் அடுத்த வாரம் ஈரான் செல்கிறார். சிரியா விவகாரம் குறித்து ஈரான், துருக்கி யுடன் நடைபெறவுள்ள முத்தரப்பு பேச்சுக்காகவே அவர் அங்கு செல்கிறார் என்று கிரெம்ளின் மாளிகை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரஷ்யாவுக்கு ஈரான் ஆயுத உதவி வழங்குவதாக அமெரிக்கா குற்றம் சுமத்திய நிலையில், அதிபர் புடினின் ஈரான் பயணம் சர்வதேசளவில் கவனத்தை ஈர்த்துள்ளது. (ஐ)

# உக்ரைனியர்களுக்கு ரஷ்ய குடியுரிமை!

## ஆணையில் புடின் ஒப்பம்

மொஸ்கோ, ஜூலை 14
உக்ரைனியர்கள் அனைவ ருக்கும் ரஷ்ய குடியுரிமை வழங்குவதற்கான ஆணையில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கையெழுத்திட்டுள்ளார்.

உக்ரைன்மீது ரஷ்யா போர் தொடுத்து இன்றுடன் 140 நாட் கள் ஆகின்றன. அங்கு போர் தொடர்ந்து வருகின்றது.

இந்நிலையில், கிழக்கு உக் ரைன் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சி யாளர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் டொனெட்ஸ்க் மற் றும் லுஹான்ஸ்க் பிராந்தியங்களில் உள்ள உக்ரைனியர்கள் எளிதில் ரஷிய குடியுரிமையை பெறுவதற்கான விரைவு குடியுரிமை திட்டத்தை கடந்த 2019ஆம் ஆண்டு ரஷ்ய அரசு அறிமுகப்படுத்தியது.

இதன் தொடர்ச்சியாக உக் ரைன் மீது ரஷியா போரை தொடங்கிய 3 மாதங்களுக்கு பிறகு கடந்த மே மாதம் மேற்கு உக்ரைனில் உள்ள ஜபோரிஜியா மற்றும் கெர்சன் பிராந்தி யங்களை சேர்ந்த மக்களும் ரஷ்ய குடியுரிமையை எளிதில் பெறும் வகையில் அந்த திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

இந்த நிலையில்தான் உக் ரைனில் உள்ள அனைத்து மக் களும் ரஷ்ய குடியுரிமையை பெறுவதற்கு விரைவு குடியு ரிமை திட்டத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கான ஆணையில் புடின் கையொப் பமிட்டுள்ளார். (ஐ)

# உலகின் பழைமையான மரங்கள் காட்டுத் தீயால் அழிவின் பிடியில்!



அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள யோசெமிட்டி தேசிய பூங்காவில் ஏற்பட்ட காட்டுத் தீயால் உலகின் மிகப் பழமையான மரங்கள் எரிந்து வருகின்றன.

கலிபோர்னியா மாகாணத்தில் கடந்த சில ஆண்டுகளாகவே காட்டுத் தீயால் பாதிப்புகள் அதிகரித்து வருகின்றன. இதனால் இலட்சக் கணக்கான மரங்களும், நிலங்களும் நாசமாகின.

இந்த நிலையில், கலிபோர்னியா மாகாணத்தில் அமைந்துள்ள யோசெமிட்டி தேசிய பூங்காவில் கடந்த சில நாட்களாக ஏற்பட்டுள்ள காட்டுத் தீ காரணமாக உலகின் பழமையான மரங்கள் எரிந்து வருகின்றன. காட்டுத் தீயை அணைக்க தீயணைப்புப் படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இதுகுறித்து அதிகாரிகள் தரப்பில் கூறும்போது, "இந்த தீ சுமார் 2,340 சதுர கி.மீ வரை பரவியது. தீயில் 25 வீதம் மட்டுமே தீயணைப்பு வீரர்களால் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. ஹெலிகொப்டர்கள் மூலம் தீயை அணைக்கும் பணி தொடர்கிறது.

இந்தத் தீயை அணைக்க எங்களால் முடிந்த அனைத்தையும் செய்து வருகிறோம். காட்டுத் தீ காரணமாக பூங்கா முழுவதும் புகைமண்டலம் சூழ்ந்துள்ளது" என்றனர்.

கலிபோர்னியாவில் அமைந்துள்ள யோசெமிட்டி தேசிய பூங்கா, அங்குள்ள பிரபல சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகும். இந்தப் பூங்காவில் உலகின் பழமையான பல சிவப்பு மரங்கள் உள்ளன. யோசெமிட்டியின் தெற்குப் பகுதியில்தான் 3,000 ஆண்டுகள் பழமையான செக்வையாஸ் மரமும் உள்ளது.

கலிபோர்னியாவில் கடந்த 2020-ஆம் ஆண்டு ஏற்பட்ட காட்டுத் தீயால் ஒரு வாரத்தில் மட்டும் சுமார் 10 இலட்சம் ஏக்கர்கள் அளவில் பாதிப்பு ஏற்பட்டது நினைவுகூரத்தக்கது. (ஐ)

# சவூதியின் பட்டத்து இளரவசர் கொலைகார கும்பலின் தலைவர்!



வாஷிங்டன், ஜூலை 14
சவூதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் கொலைகாரர். அவர் கொலைகளை செய்வதற்காக கூலிப்படை ஒன்றையும் நடத்துகிறார் என்று அந்த நாட்டின் முன்னாள் உளவுப் பிரிவின் உயர் அதிகாரி ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சவூதி இளவரசராக இருந்த முகமது பின் நயீப்பின் நீண்டகால ஆலோசகராக இருந்த அல்ஜப்ரி, சவுதி அரேபியாவின் இப்போதைய இளவரசர் "எம். பி. எஸ்" என்றழைக்கப்படும் முகமது-பின்-சல்மான் குறித்து பரபரப்பு குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

சவூதி உளவுத்துறை முன்னாள் உயர் அதிகாரியான அல்ஜப்ரி கூறியவை வருமாறு,

"எம். பி. எஸ். கடத்தல் மற்றும் கொலைகளை மேற்கொள்ள "புலிப்படை" என்று அழைக்கப்படும் கொடூரமான கும்பலை நடத்துகிறார். அவர், தனது மக்களுக்கும், அமெரிக்கர்களுக்கும் மற்றும் ஒட்டுமொத்த பூலோகத்திற்கும் அச்சுறுத்தலாக உள்ளார்.

எம். பி. எஸ். ஒரு மனநோயாளி, பச்சாதாபம் இல்லாதவர், உணர்ச்சிகளை உணரமாட்டார். அவருடைய அனுபவத்திலிருந்து ஒருபோதும் பாடங்களை அவர் கற்றுக்கொள்ளவில்லை. இந்த கொலையாளி செய்த அட்டூழியங்களையும் குற்றங்களையும் நாங்கள் கண்ணால் பார்த்திருக்கிறோம்."

2017 ஜூன் மாதம் பதவி நீக்கம் செய்யப்பட்டார் இளவரசர் முகமது பின் நயீப். அதற்கு பின்னர், அல்ஜப்ரி, தனது உயிருக்கு பயந்து, பின்னர் நாட்டை விட்டு வெளியேறி கனடாவுக்கு தப்பிச் சென்றார். அங்கு அவர் இப்போது தலைமறைவாக உள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து பேசிய அல்ஜப்ரி, "சவூதி அரசாங்கம் மற்றும் அந்நாட்டின் அரச குடும்பத்தைப் பற்றிய முக்கியமான தகவல்களை நான் தெரிந்து வைத்திருப்பதால், அணுகுவதால், ஒரு நாள் இளவரசர் முகமது பின் சல்மானால் கொல்லப்படுவேன்" என்றார்.

இந்நிலையில், அவருடைய குற்றச்சாட்டுகளை மறுத்துள்ள அமெரிக்காவில் உள்ள சவூதி தூதரகம், அல்ஜப்ரியை "ஒரு மதிப்பிழந்த முன்னாள் அரசு அதிகாரி" என்றும், "அவர் செய்த நிதிக் குற்றங்களை மறைப்பதற்காகவே இதுபோன்ற கதைகளை உருவாக்குகிறார்" என்றும் தெரிவித்துள்ளது. (ஐ)

# எல். பி. எல். இருபது - 20 தொடர் ஓகஸ்ட் 1ஆம் திகதி ஆரம்பம்!

கொழும்பு, ஜூலை 14

எல். பி. எல். என்று அழைக்கப்படும் லங்கா பிறீமியர் லீக்கின் நடப்பு ஆண்டுக்கான தொடர் எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

முதல் போட்டியில் நடப்பு சம்பியனான யாழ்ப்பாணம் கிங்ஸ் அணி காலி கிளாடியேட்டர்ஸ் அணிகள் மோதவுள்ளன.

24 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில், முதல் சுற்றுப் போட்டிகள் 15ஆம் திகதி வரை நடைபெறும். இதில் 20 போட்டிகள் நடைபெறும்.

17ஆம் திகதி ஆரம்பமாகும் இறுதிச் சுற்றில் இறுதிப் போட்டி உட்பட 4 போட்டிகள் இடம் பெறவுள்ளன.

இறுதிப் போட்டி ஓகஸ்ட் 21ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஓய்வு முடிவு குறித்து பெடரர் சூசக தகவல்!

லண்டன், ஜூலை 14




தனது ஓய்வு முடிவு குறித்து ரோஜர் பெடரர் சூசகமாகத் தெரிவித்துள்ளார்.

ரென்னிஸ் அரங்கின் ஜாம்பவானாக கருதப்படுபவர் சுவிற்சர்லாந்து நட்சத்திரம் ரோஜர் பெடரர். 20 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றுள்ள இவர் காயம் காரணமாக பல மாதங்களாக போட்டிகளில் விளையாடவில்லை.


சமீபத்தில் நடந்து முடிந்த உயரிய அந்தஸ்து கொண்ட கிராண்ட்ஸ்லாம் தொடரான விம்பிள்டன் போட்டியிலும் காயம் காரணமாக அவரால் பங்கேற்க முடியவில்லை. மீண்டும் இவர் எப்போது களத்துக்கு திரும்புவார் என ரசிகர்கள் ஆர்வத்துடன் எதிர்பார்த்துள்ளனர்.

இந்த நிலையில் அவர் தனது ஓய்வு முடிவு குறித்து சூசகமாக அறிவித்துள்ளார். இது குறித்து அவர், "நான் வெற்றியை விரும்புபவன், ஆனால் இனியும் சவாலாக ஆட முடியவில்லை எனில் விளையாடுவதை நிறுத்துவது சிறந்தது. மகிழ்ச்சியாக இருக்க எனக்கு டென்னிஸ் தேவையில்லை என்று நினைக்கிறேன். இப்பொது நான் சின்னச் சின்ன விஷயங்களில் மகிழ்ச்சி அடைகிறேன். என் மகன் எதையாவது சரியாக செய்யும் போதும் என் மகள் நன்றாக மதிப்பெண் பெறும் போதும் நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஒரு தொழில்முறை வாழ்க்கையில் நிரந்தரமாக நீடிக்க முடியாது என்று எனக்குத் தெரியும்", என்றார். (ஐ)

# றொனால்டோ தொடர்ந்தும் எங்களுடனே பயணிப்பார்!

## மன்செஸ்டர் யுனைற்றெட் அறிவிப்பு

மன்செஸ்டர், ஜூலை 14



கிறிஸ்ரியானோ றொனால்டோ விற்பனைக்கு இல்லை. அவர் எங்களின் திட்டத்தில் இருக்கிறார் என்று மன்செஸ்டர் யுனைற்றெட்டின் மேலாளர் எரிக் டென் ஹொக் கூறியுள்ளார்.

37 வயதான றொனால்டோ மன்செஸ்டர் யுனைற்றெட்டை விட்டு வெளியேறவுள்ளார், அவர் தாய்லாந்து சுற்றுப் பயணத்தை தவற விடுவார் என்று முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்த நிலையிலேயே மன்செஸ்டர் யுனைற்றெட் கழகத்தின் மேலாளர் மேற்படி தெரிவித்துள்ளார்.

கடந்த தொடரில் றியல் மட்ரிட் மற்றும் ஜூவன்ட்ஸ் அணிக்காக விளையாடிய கிறிஸ்ரியானோ றொனால்டோ மன்செஸ்டர் யுனைற்றெட்டுக்கு திரும்பியுள்ளார்.

அவர் தனிப்பட்ட பிரச்னைகள் காரணமாக தற்போது எங்களுடன் இல்லை. நாங்கள் அவருடன் திட்டமிட்டுள்ளோம். நாம் தொடர்ந்து பணியாற்றுவோம். அவரை விற்பனை செய்யும் திட்டம் எங்களிடம் இல்லை. இந்தத் தொடரில் மன்செஸ்டர் யுனைற்றெட்டுக்காக அவர் தொடர்ந்து விளையாடுவார் என்றும் அணி மேலாளர் தெரிவித்தார். (ஐ)

# ரோஹித் - தவான் புதிய மைல்கல்!

லண்டன், ஜூலை 14



தொடக்க இணையாகக் களமிறங்கி 5 ஆயிரம் ஓட்டங்களை கடந்து ரோஹித் சர்மா - தவான் புதிய மைல்கல்லை எட்டினர்.

இங்கிலாந்து - இந்தியா அணிகளுக்கு இடையேயான முதல் ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நடந்தது.

இதில், இந்திய அணி 10 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில் ரோஹித் சர்மா 76 ஓட்டங்களையும், தவான் 31 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

இதன்மூலம், அவர்கள் தொடக்க இணையாக ஒருநாள் போட்டிகளில் 5 ஆயிரம் ஓட்டங்களை கடந்த இரண்டாவது இந்திய இணை என்ற சாதனையைப் படைத்தனர்.

முதலிடத்தில் சச்சின் - கங்குலி இணையர் உள்ளனர். ஒரு நாள் சர்வதேச போட்டிகளில் சச்சின் டெண்டுல்கர் - சௌரவ் கங்குலி இணைக்கு பிறகு ரோஹித் மற்றும் தவான் இந்தியாவின் இரண்டாவது வெற்றிகரமான தொடக்க இணையாக இருக்கின்றனர்.

கங்குலி - டெண்டுல்கர் 136 இனிங்ஸ்களில் 6,609 ஓட்டங்களை எடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 10 விக்கெட்களால் இந்தியா வெற்றி!




லண்டன், ஜூலை 14

பும்ராவின் அசத்தல் பந்துவீச்சு கைகொடுக்க இங்கிலாந்து அணியை 10 விக்கெட்களால் வெற்றி கொண்டது இந்திய அணி.

இங்கிலாந்துக்கு இந்திய அணி சுற்றுப்பயணம் செய்துள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதல் ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நடந்தது.

இந்தப் போட்டியில், 111 ஓட்டங்கள் என்ற இலகு வெற்றி இலக்கைத் துரத்திய இந்திய அணி விக்கெட் இழப்பின்றி வெற்றியைப் பெற்றது.

தொடக்க வீரர்களாக அணித் தலைவர் ரோஹித் சர்மா மற்றும் தவான் களம் இறங்கினர்.இருவரும் நேர்த்தியாக விளையாடி விக்கெட் இழப்பின்றி போட்டியை வென்று கொடுத்தனர். இருவரும் இணைப்பாட்டமாக 114 ஓட்டங்களை எடுத்தனர். இதில், ரோஹித் 76 ஓட்டங்களும், தவான் 31 ஓட்டங்களும் எடுத்தனர்.

முன்னதாக, முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 25.2 ஓவர்களில் 110 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. அந்த அணியில் பட்லர் மட்டுமே போராடி 30 ஓட்டங்களை எடுத்தார். இதுவே அந்த அணியின் வீரர் ஒருவர் இந்தப் போட்டியில் பெற்ற அதிகூடிய ஓட்டமாக அமைந்தது.இந்தியாவின் பந்துவீச்சில் பும்ரா 7.2 ஓவர்கள் வீசி 19 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்து 6 விக்கெட்களை கைப்பற்றினார். அத்துடன், போட்டி நாயகன் விருதையும் வென்றார். இதேபோல, முஹமட் ஷமி 3 விக்கெட்களும், பிரசித் கிருஷ்ணா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

லண்டன் ஓவல் மைதானத்தில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது. இந்தப் போட்டி வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரில் இந்தியா 1 - 0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. (ஐ)

# புதிய ஜனாதிபதி தெரிவு வரை மக்கள் அமைதி காக்கவேண்டும்

## சவேந்திர சில்வா கோரிக்கை



கொழும்பு, ஜுலை. 14

தற்போதைய சூழலில் நாட்டில் உள்ள மக்கள், இளைஞர்களை அமைதிகாக்குமாறு பாதுகாப்பு படைகளின் பிர தானி ஜெனரல் சவேந்திர சில்வா கோரிக்கை விடுத்துள் ளார்.

முப்படைகளின் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் சகிதம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

தற்போதைய சூழலில் புதிய ஜனாதிபதி தெரிவாகும் வரையில் முப்படையினர், பொலிஸாருக்கு ஆதரவு வழங்க வேண்டும், சொத்துக்களைச் சேதப்படுத்தவேண்டாம்.

இன்று (நேற்று) மாலை சபாநாயகர் தலைமையில் நடைபெறுகின்ற அரசியல் தலைவர்கள் கூட்டத்தில் அரசியல் ரீதியாக முக்கிய தீர்மானம் ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளது - என்றார். (அ)

# ரணிலை இடைக்கால ஜனாதிபதியாக்க பெரமுனவின் உறுப்பினர்கள் தீர்மானம்

கொழும்பு, ஜுலை. 14

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை இடைக்கால ஜனாதிபதியாக நியமிக்க சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

அந்த கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவர் இந்த தகவலை தெரிவித்துள்ளார்.

இடைக்கால ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பு நடைபெறும்போது, ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்க அந்த கட்சியின் உறுப்பினர்கள் பலர் தீர்மானம் எடுத்துள்ளனர்.

எவ்வாறாயினும் கட்சியின் சில உறுப்பினர்கள் மாற்றுத் தீர்மானித்தில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மூத்த வைத்தியர் ஜெமீலுக்கு சேவைநலன் பாராட்டு நிகழ்வு

அம்பாறை, ஜுலை. 14

சாய்ந்தமருது பிரதேச மருத்துவம், பெண்கல்வி மேம்பாடு, சமூக சேவை வேலைத்திட்டங்களில் மும்முரமாக பணியாற்றிவந்த சாய்ந்தமருது- மாளிகைக்காடு ஜும்மாப்பெரியபள்ளிவாசல் முன்னாள் தலைவரும் சிரேஷ்ட பிரஜைகள் அமைப்பின் ஸ்தாபக தலைவருமான டாக்டர் எம்.ஐ.எம். ஜெமீலின் சேவை நலன் பாராட்டு நிகழ்வு சாய்ந்தமருது- மாளிகைக்காடு ஜும்மாப் பெரிய பள்ளி வாசலின் ஏற்பாட்டில் பள்ளிவாசல் தலைவர் ஏ. ஹிபத்துள் கரீம் தலைமையில் சாய்ந்தமருதில் நேற்று இடம் பெற்றது.



1966 ஆம் ஆண்டு முதல் கிழக்கிலங்கையில் மிகவும் பிரசித்திபெற்ற வைத்தியராக அறியப்பட்ட டாக்டர் எம்.ஐ. எம். ஜெமீல் பெண்பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டு வேலைத் திட்டங்களில் மும்முரமாக செயற்பட்டவர். சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்மாப்பெரியபள்ளிவாசல் தலைவராக 07 ஆண்டுகளாக பணியாற்றி ஸக்காத் நிதியத்தை நிறுவியதுடன் பள்ளிவாசலுக்கான நிர்வாக கட்டிடத்தையும் பெற முனைப்புடன் செயற்பட்டவர். கடந்த சுனாமி காலத்தில் வெகுவாக பாதிக்கப்பட்ட சாய்ந்தமருது கிராமத்தை கட்டியெழுப்ப ஜும்மாப் பெரிய பள்ளி வாசல் தலைவராக அர்ப்பணிப்புடன் பணியாற்றியிருந்தார். இலங்கையின் முதலாவது முஸ்லிம் பெண் பல்கலைக்கழக வேந்தராக இருந்தவரும், கிழக்கின் முதல் முஸ்லிம் பட்டதாரியாகவும் வெளியேறிய தேசபந்து ஜெஸிமா இஸ்மாயிலுடன் இணைந்து நிறைய கல்விச்செயற்றிய இவரின் சேவைகளை ஜும்மாப் பெரிய பள்ளிவாசல் தலைவர் ஏ. ஹிபத்துள் கரீம், மௌலவி எம்.எஸ்.எம். நுஹ்மான் ஆகியோர் நினைவுபடுத்தி இங்கு உரையாற்றினர்.

இங்கு கருத்து தெரிவித்த டாக்டர் எம்.ஐ.எம். ஜெமீல், பள்ளிவாசல் நிர்வாகிகள் எல்லோரும் கலந்து கொண்டு என்னை கௌரவித்தமையை மகிழ்ச்சியுடன் நோக்குகிறேன். நல்லவர்களை ஒரு சமூகம் பாராட்டாமல் விட்டால் நல்லவர்கள் உருவாகாமலே சென்றுவிடுவார்கள் எனும் கூற்றுக்கு அமைய சாதனையாளர்கள், கௌரவிக்க தகுதியானவர்களை நாம் உரிய நேரத்தில் கௌரவிக்க வேண்டும். எனது சமூக சேவை காலங்களில் நிறைய விடயங்களை இந்த சமூகத்திற்காக செய்திருக்கிறேன். அவைகளை நினைத்து பார்க்க இது நல்ல சந்தர்ப்பமாக பார்க்கிறேன் - என்றார். (அ)

# மரண அறிவித்தல்

## கனகராஜா கனகரெட்ணம் (ஈசன்)



**தோற்றம்** 22 - 05 - 1966 **மறைவு** 10 - 07 - 2022

யாழ். கஸ்தூரியார் வீதியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Bonn I வதிவிடமாகவும் கொண்ட கனகராஜா கனகரெட்ணம் கடந்த 10-07-2022 ஞாயிற்றுக்கிழமை அன்று இறை வனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற கனகரெட்ணம் – பரமேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு புதல்வரும், கலாரஞ்சினி அவர்களின் அன்புக் கணவரும்,நிரேஸ், நிரூபா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கனகேஸ்வரன்(கண்ணன்) அவர்களின் அன்புச் சகோதரரும், காவேரி, ஜமுனா, ராஜா, விசாகன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ராஜேந் திரன், சண்முகேஸ்வரன், வித்தியாகரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பார்வைக்கு:
Thursday, 14 Jul 2022 3:00 PM - 5:00 PM
American Protestant Church Kennedyallee 150, 53175 Bonn, Germany

தொடர்புகளுக்கு :
**விசாகன் - சகோதரன்**
**Mobile : +4915780430416**
**வித்தியாகரன் - மைத்துனர்**
**Mobile : +447477118100**

தகவல்:
**விசாகன் - சகோதரன்**

# மரண அறிவித்தல்

## அருளானந்தம் சிவகுருநாதன் (சிவத்தார்)

செட்டிகுளம் விவாக பிறப்பு, இறப்பு பதிவாளர், சமாதான நீதவான்



**தோற்றம்** 21 - 02 - 1931 **மறைவு** 11 - 07 - 2022

யாழ். நெடுந்தீவு மத்தியைப் பிறப்பிடமாகவும், வவுனியா செட்டிகுளத்தை வதிவிடமாகவும், கனடா Toronto வை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட அருளானந்தம் சிவகுருநாதன் கடந்த 11-07-2022 திங்கட் கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற அருளானந்தம் – வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வைத்தியநாதன் – கண்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பவானி அவர்களின் அன்புக் கணவரும்,சிவமதி(கனடா), வளர்மதி(கனடா), சிவதயாளன்(கனடா), கலைமதி(கனடா), தயாமதி(இலங்கை), தயாபரன்(பாபு– கனடா), தமிழ்ச்செல்வி(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும்,மகேஸ்வரன்(கனடா), லோகேஸ்வரன்(கனடா), லதா(கனடா), சசிதரன்(கனடா), ஜெய கோபி(கனடா), சுஜிதா(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும்,காலஞ்சென்ற தங்கம்மா, அப்பையா(இலங்கை), காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, மகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சதாசிவம், புவனேஸ்வரி, மகேஸ்வரி, புஸ்பவதி, காலஞ்சென்ற பராசக்தி, பரமரெத்தினம் (இலங்கை), லோகேஸ்வரி(கனடா), காலஞ்சென்ற லோகநாதன், பாக்கியநாதன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும்,சோபனா(கனடா), பாலச்சந்தர்(கனடா), கோபிநாத் (கனடா), லக்சனா(கனடா), அர்சனா(கனடா), சிவஜெனாத்(கனடா), லக்ஸ்மிதா(கனடா), அக்சயா(கனடா), அஸ்வந்(கனடா), அகரன்(கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், றிகான்(கனடா), வீகான்(கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டனும்,காலஞ்சென்றவர்களான கோபாலபிள்ளை, பிறைசூடி மற்றும் திருஞானம்(கனடா) ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

பார்வைக்கு :
Saturday, 16 Jul 2022 6:00 PM - 9:00 PM
Lotus Funeral and Cremation Centre Inc. 121 City View Dr, Etobicoke, ON M9W 5A8, Canada.

தகனம் :
Sunday, 17 Jul 2022 11:00 AM - 1:00 PM
Lotus Funeral and Cremation Centre Inc. 121 City View Dr, Etobicoke, ON M9W 5A8, Canada.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**தயா - மகன் : Mobile : +14168800255**
**பாபு - மகன் : Mobile : +14164576699**
**கலா - மகள் : Mobile : +16477711481**

தகவல்:
**கலா - மகள்**

## ஜனாதிபதிக்...

வழங்கப்படும் என்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவெடுக்கப் பட்டிருந்தது.

அதற்கமைய,

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும் தற்போதைய பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க ஆகியோர் ஜனாதிபதி வேட் பாளர்களாக வேட்புமனுத் தாக்கல் செய்வார்கள் என்று தெரியவந்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்குவதற்கு பொதுஜன முன்னணி உறுப்பினர்கள் ஆதரவு வழங்க முன்வந்திருப்பதாக ஏற்கனவே தகவல்கள் வெளியாகியுள்ளன. அதேவேளை, ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்குவதற்கு முயற்சிப்பதாக அனுரகுமார திஸநாயக்க பகிரங்கமாக குற்றம்சாட்டியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சிறுபான்மைக்கட்சிகளையும் சேர்த்துக் கொண்டு சஜித் பிரேதமாஸவை ஜனாதிபதியாக்குவதற்கு வாக்களிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை,

ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவை ஜனாதிபதியாக்குவதற்கான முயற்சியில் ஜே.வி.பி ஈடுபட்டுள்ள அதேவேளை, கடும் சிங்கள தேசிய வாதியான சம்பிக்க ரணவக்கவும் தனது ஆதரவை பகிரங்கமாக அறிவித்திருந்தார். அதேபோல கடும் சிங்கள தேசியவாதிகளான பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் அனுரகுமாரவுக்கு ஆதரவளிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனிடையே, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறீசேனவும் ஜனாதிபதியாக முயற்சிக்கலாம் என்றாலும் கூட சுதந்திரக்கட்சியினர் தவிர்ந்த வேறு எந்தத்தரப்பும் அவருக்கு ஆதரவு வழங்குவது சந்தேகமே. (அ)

## பிரதமர்...

இதனையடுத்து நேற்று மாலை இடம்பெற்ற கட்சித் தலைவர்களுக்கு இடையிலான கலந்துரையாடலிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ராஜினாமா செய்வதற்கு முன்னதாக தற்போது பதில் ஜனாதிபதியாக உள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலகவேண்டும் என வலியுறுத்துவதென நேற்றைய அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானித்ததாக அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று புதன்கிழமை பதவி துறப்பார் என ஏற்கனவே சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன முன்னர் கூறியவாறு, ஜனாதிபதியின் பதவி துறப்பை சபாநாயகர் உறுதிப்படுத்தவேண்டும் எனவும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

அத்துடன் எதிர்வரும் 20ஆம் திகதி புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்படும் வரை சபாநாயகரே பதில் ஜனாதிபதியாக செயற்படவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் இந்தக் கூட்டத்தில் முப்படைத் தளபதிகளும் பங்கேற்றனர். பாராளுமன்றம் முற்றுகையிடப்பட்டால் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு அனுமதி வழங்குமாறு அவர்களால் கோரப்பட்டது. ஆயினும் அவ்வாறு அனுமதி வழங்குவதில்லை எனவும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானித்தனர்-என்றார். (அ)

## பதில்...

வெளிநாடு சென்றுள்ள நிலையில், அரசியலமைப்பின் 37 (1) பிரகாரம், ஜனாதிபதியினால், பிரதமர் ரணில் விக்ரசிங்க பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

இது குறித்து ஜனாதிபதி சபாநாய கருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில்-

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், ஜனாதிபதியின் அதிகாரங்களையும், கடமைகளையும், நடவடிக்கைகளையும் நிறைவேற்றவும், நிகழ்த்தவும், செயல்படுத்தவும் இயலாதிருப்பதாக கருதுவதால், நான் இலங்கையில் இல்லாத இவ் வேளையில், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவை 2022 ஜூலை 13ஆம் திகதியிலிருந்து ஜனாதிபதியின் அதிகாரங்களையும், கடமைகளையும், நடவடிக்கைகளையும் நிறைவேற்றவும், நிகழ்த்தவும், செயல்படுத்தவும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 37(1) பிரிவின் கீழ், நான் இலங்கையில் இல்லாத அக் காலப்பகுதிக்கு நான் இத்தால் நியமிக்கிறேன் என்பதை இதன்மூலம் நான் தெரியப்படுத்துகின்றேன்-என்றுள்ளது. (அ)

## பிரதமரின்...

இராணுவத்தினர் மேற்கொண்ட கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதல் உட்பட்ட தாக்குதல்களில் சிக்கி 30 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் பெண்கள் இருவரும் அடங்குவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இருந்தபோதிலும் போராட்டத்தினைக் கைவிடாத போராட்டக்காரர்கள் தடைகளை உடைத்து உள்ளே நுழைந்தனர்.

மேல் மாகாணத்தில் ஊரடங்குச் சட்டம் தற்போது நடைமுறையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இராணுவ...

கோட்டாபய ராஜபக்ஷ நேற்று ஜனாதிபதி பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ள நிலையிலேயே உத்தியோகபூர்வ பதவி விலகல் அறிவிப்புக்கு முன் ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களைப் பயன்படுத்தி அவர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

கடந்த சனிக்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகத்தை மக்கள் முற்றுகையிட்டதை அடுத்து அவர் தலைமறைவாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், அமெரிக்கா செல்ல கோட்டாபய முயன்ற நிலையில் அவருக்கு விசா நிராகரிக்கப்பட்டது.

அதேவேளை, நேற்று இரவு அவர் மாலைதீவில் இருந்து சிங்கப்பூர் நோக்கி விமானத்தில் பயணித்தார் என்றும் தெரியவந்தது. ஆயினும் அவர் சிங்கப்பூரில் தரையிறங்கியதை இந்தச் செய்தி அச்சுக்குப் போகும்வரை உறுதிப்படுத்த முடியவில்லை.

ஜனாதிபதி கோட்டாபய நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக பிரதமர் அலுவலகம் உறுதிப்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் பிரதமரின் ஊடகப் பிரிவு ஊடகங்களுக்கு குறிப்பு ஒன்றை அனுப்பியுள்ளது.

அதில் கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டில் இருந்து வெளியேறியுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

முன்னதாக தாம் கோட்டாபய ராஜபக்ஷ நாட்டில் இருந்து வெளி யேறுவதற்கு விமானம் ஒன்றை வழங்கியதை இலங்கையின் வான்படை உறுதிப்படுத்தியிருந்தது. நேற்று அதிகாலை ஜனாதிபதியும் அவரது பாரியாரும், இரண்டு பாது காப்பு அதிகாரிகளுடன் மாலைதீவுக்கு சென்றதாக சர்வதேச ஊடகங்கள் அறி வித்திருந்தன.

பின்னர் அவர் மாலைதீவில் தரையிறங்கியமையையும் சர்வதேச ஊட கங்கள் உறுதிப்படுத்தியிருந்தன.

# கோட்டாபயவை நாடு கடத்த கோரி மாலைதீவிலும் நேற்று போராட்டம்

கொழும்பு, ஜூலை 14

விமானப்படை விமானத்தில் மாலைதீவுக்கு தப்பி ஓடியுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவுக்கு மாலைதீவில் இலங்கையர்கள் ஒன்று திரண்டு எதிர்ப்பு நடவ டிக்கையில் ஈடுபட்டனர்.

மாலைதீவில் வசிக் கும் மற்றும் தொழில் நிமித்தம் தங்கியுள்ள இலங் கையர்கள் இலங் கையின் கொடியினை ஏந்தியபடி போராட்டத்தில் ஈடு பட்டனர்.அங்கும் கோட் டா கோ ஹோம் என்ற வாச கங்கள் தாங்கிய பதாதை களை ஏந்தியவாறு அவர்கள்



போராட் டத்தில் ஈடுபட்டனர்.

பதாதைகளை அகற்றும் நடவடிக்கையில் அந்நாட்டு பொலிஸார் ஈடுபட்ட போதிலும் மக்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# தமிழ் எம்.பிக்கள் அனைவரும் தீர்வுக்காக ஒன்றுபடவேண்டும்

## சர்வ மதத்தலைவர்கள் அழைப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 14

தற்போதைய நெருக் கடி நிலையில் தமிழ்மக் களின் பிரச்னைக்கான தீர்வை முன்வைப்பதற்கு அனைத்து பாராளுமன் றப் பிரதிநிதிக ளும் ஒன்றுகூடித் தீர்க்கமான முடிவெடுக்க வாருங்கள் என சர்வ மதத்தலைவர்கள் கூட்டாக வலி யுறுத்தியுள்ளனர்.

நல்லை திரு ஞான சம்பந்தர் ஆதீ னத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே சமயத் தலைவர்கள் கூட்டாக வலியுறுத்தினர்.

அவர்கள் மேலும் அறிக்கையில்-

சகல தமிழ்க் கட்சிகளும் குறிப்பாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் விரைவில் ஒன்றுகூடி இன்றைய இலங்கை அரசியல் சூழலில் எடுக்க வேண்டிய தீர்மானம் என்ன என்பதை சீராகத் தீர்மானிப்பதற்கு முன்வர வேண்டும்.

வடக்கு-கிழக்கு,மலையகம்,தெற்கு என்ற பேதமின்றி தமிழ் பாராளுமன்ற அங்கத்தவர்கள், கட்சித் தலைவர்கள் வேறுபாடுகளைக் கடந்து மக்களுக்காக ஒன்றுகூடவேண்டிய தருணம் இது.

எனவே அறிவு பூர்வமாக தீர்க்க தரிசனத்தோடு ஒன்றுகூடி ஆராயுங்கள்.இது காலத்தின் கட்டாயம்.இவ்வேளை நீங்கள் ஒன்றுகூடி ஆராய மறுப்பீர்கள் ஆனால் அது மாபெரும் வரலாற்றுத் தவறாகும்-என்றனர்.

இந்த ஊடக சந்திப்பில் நல்லை ஆதீன குரு முதல்வர் சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், யாழ் மறைமாவட்ட ஆயர் ஜஸ்டின் பேனாட் ஞானப்பிரகாசம், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன், ரிஷி தொண்டுநாத சுவாமிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

## பஸிலும்...

வெளியிட்டன.

டுபாய் செல்லும் விமானத்தில் வெளியேறிய பஸில், அங்கிருந்து அமெரிக்கா செல்ல உள்ளதாக தெரியவருகிறது.

பஸில் ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் அதிகாலை 3.15 மணிக்கு டுபாய் செல்ல விருந்த எமிரேட்ஸ் எயார்லைன்ஸ் விமான மான ஈ.கே-349 இல் செல்வதற்காக கட்டு நாயக்க விமான நிலையம் சென்று ஆவ ணங்களை சமர்ப்பித்த நிலையில் அவருக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது.

டுபாய் வழியாக அமெரிக்காவுக்குச் செல்ல விமான பயணச் சீட்டை இவர் பெற்றதாகத் தகவல்கள் வெளியாகின. அவருடன் ராஜபக்ஷ குடும்பத்தில் மேலும் 6 பேர் பயணிப்பதாக விமான ஆசன ஒதுக் கீட்டுப் பட்டியலை அடிப்படையாக கொண்டு சமூக வலைத்தளங்களில் செய்தி கள் வெளியாகின.

பஸில் ராஜபக்ஷ பெற்ற விமான பயணச் சீட்டின் படி, அவர் மீண்டும் இலங்கைக்கு திரும்பும் திகதி 2023 மார்ச் 01 எனக் குறிப் பிடப்பட்டிருந்தது.

எனினும் எதிர்ப்பினால் நேற்று முன்தினம் நாட்டிலிருந்து வெளியேற முடியாத பஸில் மீண்டும் நேற்று அதிகாலை விமானம் மூலம் நாட்டிலிருந்து வெளியேறி அமெ ரிக்கா சென்றுள்ளதாக சர்வதேச ஊடகங் கள் செய்தி வெளியிட்டன. (அ)

## இன்று காலை 5 மணிவரை நாடு முழுவதும் ஊரடங்கு

கொழும்பு, ஜூலை 14

நாடு முழுவதும் இன்று காலை வரை ஊரடங்கு அமுல்படுத்தப்படுவதாக பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

இன்று காலை 5.00 மணி வரை நாடு முழுவதும் ஊரடங்கு அமுல்படுத் தப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதிக்கான அதிகாரங்களை பதில் ஜனாதிபதியாக பதிவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங் கவுக்கு கையளித்து ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷவால் அதி விசேட வர்த்தமானி நேற்றிரவு வெளியிடப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அவரகாலச்சட்டம்...

உத்தரவிட்டார். கலவரத்தில் ஈடுபடும் நபர்களை கைது செய்யும் படியும் அவர்கள் பயணிக் கும் வாகனங்களை கைப் பற்றும்படியும் பிரதமர் இராணுவத்தினரைப் பணித்துள்ளார். நேற்று பிரதமர் அலுவலகம் போராட்டக்காரர்களால் முற்று கையிடப்பட்டு நூற்றுக்கணக்கானவர் கள் மதில்களால் பிரதமர் அலுவல கத்துக்குள் நுழைந்தனர். ஏனையவர்கள் கண்ணீர்ப்புகைத் தாக்குதலுக்கு உள்ளாகினர்.

இந்நிலையிலேயே பிரதமர் தனது அலுவலகத்தைப் பாதுகாக்கும் நோக்கில் குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டது. (அ)

மட்டு. ஈழநாடு
Eelanadu

# கோட்டா, பஸில் தப்பிச் செல்ல உதவியா? அடியோடு மறுக்கின்றது இந்திய தூதரகம்

கொழும்பு, ஜூலை 14

**இலங்கையில் இருந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் வெளியேறி வெளிநாடு செல்ல இந்தியா உதவியதாக சில ஊடகங்களில் வெளியான செய்திகள் ஆதாரமற்றவை என இலங்கைக் கான இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.**

ஜனநாயக வழிமுறைகள், விழுமியங்கள், அரசியலமைப்பு வழிமுறைகள் ஊடான செழிப்பு மற்றும் முன்னேற்றத்திற்கான அபிலாஷைகளை நனவாக்க முயலும் இலங்கை மக்களுக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும் என மீண்டும் வலியுறுத்துகிறோம் என இலங்கக்கான இந்தியா தூதரகம் நேற்றுக் காலை தூதரகத்தின் உத்தியோக பூர்வ ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் வெளியேற இந்தியா உதவியதாக சில உடகங்களில் வெளியான செய்திகளை மறுப்பதாக கொழும்பில் உள்ள இலங்கைக் கான இந்திய தூதுவரும் கருத்து வெளியிட்டுள்ளார். (அ)

# கோட்டாபயவை அழைத்துச் சென்றமை; உறுதிப்படுத்தி விமானப்படை அறிக்கை

கொழும்பு, ஜூலை 14

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரின் துணைவியார் ஆகியோர் இரண்டு பாதுகாப்பு அதிகாரிகளுடன், கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து மாலைதீவுக்கு சென்றமையை உறுதிப்படுத்தி இலங்கை விமானப்படை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதற்காக நேற்று அதிகாலை வான்படையின் விமானம் ஒன்றைத் தாம் வழங்கியமையை இலங்கை வான்படை உறுதிப்படுத்தியுள்ளது.

இலங்கையின் அரசியலமைப்பில் நிறைவேற்று ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு இணங்க தற்போதைய அரசாங்கத்தின் கோரிக்கையின் பேரில் பாதுகாப்பு அமைச்சின் முழு ஒப்புதலுக்கு அமைய சுங்கம் மற்றும் பிற சட்டங்களுக்கு உட் பட்டு இந்த விமானம் வழங்கப் பட்டதாக வான்படை தெரிவித்துள்ளது. (அ)

# சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட குழு

### பதில் ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 14



சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும் நிலைமையை வழமைக்கு கொண்டுவருவதற்கும் முப்படைகளின் தளப திகள் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிய காணொளி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த குழுவில் படைகளின் பிரதானி, பொலிஸ் மா அதிபர் ஆகியோரும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் ரணில் தெரிவித்துள்ளார். (அ)

## ஐ.ரி.என். தொலைக்காட்சியும் முடங்கியது!

கொழும்பு, ஜூலை 14

இலங்கை அரசாங்கத்தின் சுயாதீன தொலைக்காட்சி நிறுவனமான ஐ.ரி.என்.ஒளிபரப்பு சேவையும் திடீரென இடைநிறுத்தப்பட்டுள்ளது.

குறித்த தொலைக்காட்சி சேவை இடைநிறுத்தப்பட்டமைக்கான காரணம் உடனடியாக வெளியிடப்படவில்லை.

முன்னதாக ரூபவாஹினி நேற்று அரைமணி நேரம் தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆட்சி மாற்றம் நடைபெறுகின்றபோது அரச ஊடகங்களில் இவ்வாறான சிக்கல்கள் ஏற்படுகின்றமை வழமை என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

# ரூபவாஹினி அரை மணி நேரம் முடக்கம்

கொழும்பு, ஜூலை 14

இலங்கை அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ தொலைக்காட்சியான ரூபவாஹினி ஒளிபரப்பு நேரலையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்த கருத்தின் தொடராக இடைநிறுத்தப்பட்டு அரை மணி நேரத்தின் பின்னர் மீண்டும் ஒளிபரப்பு தொடங்கியுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று இடம்பெற்றது.

ரூபவாஹினியில் நேரலை நிகழ்ச்சியில் போராட்டக்காரர்கள் பங்குகொண்டு கருத்து வெளியிட்டிருந்தனர். அவர்கள் ஜன அரகலய நிகழ்ச்சி மட்டுமே ரூபவாஹினியில் ஒளிபரப்பாகும் என்று கருத்துத் தெரிவித்திருந்தனர்.

அதன் தொடராக ஒளிபரப்பு இடைநிறுத்தப்பட்டது. பின்னர் அரை மணி நேரம் கழித்து ஒளிபரப்பு மீண்டும் தொடங்கியது. (அ)







# காரைநகர் கடற்பகுதியில் கைதான தமிழக மீனவர்கள் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஜூலை 14

காரைநகர் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 06 தமிழக மீனவர்களையும் எதிர்வரும் 15ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினம் மீன் பிடி துறை முகத்தில் இருந்து மீன் பிடிக்க புறப்பட்ட மீனவர்களில் ஆறு பேர் இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைத்து மீன் பிடியில் ஈடுபட்ட நிலையில் கடற்படையினரால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 06 தமிழக மீனவர்களும் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இதனை அடுத்து நீதவான் 06 மீனவர்களையும் எதிர்வரும் 15ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ)

# பாராளுமன்றம் முற்றுகையிடப்படலாம்?

### அந்தப் பகுதியில் திடீரென மின்சாரம் தடை பெருமளவனாவர்கள் திரண்டதால் பதற்றம்

கொழும்பு, ஜூலை. 14

பாராளுமன்றம் அமைந் துள்ள பகுதிக்கு அண்மையாக பெருமளவான மக் கள் ஒன்று கூடிய நிலையில் அப்பகுதியில் திடீரென மின் தடையேற் படுத் தப்பட்டதால் அங்கு பதற்ற மான சூழல் ஏற்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகி யோரை பதவி விலக வலியுறுத்தி நேற்று மாலை பாராளுமன்றத்திற்கு அருகா மையில் உள்ள பெல்துவ சுற்றுவட்டார பகுதியில் மக்கள் ஒன்று கூடிப் போராட் டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

போராட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டு வீச்சு மற்றும் நீர்த்தாரை பிரயோகம் என்பன தொடர்ந்து மேற்கொண்டதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

பெரும்திரளான மக்கள் அங்கு கூடியுள்ள நிலையில் அப்பகுதியில் திடீரென மின் வெட்டு ஏற்படுத்தப் பட்டது.

பெரும் எண்ணிக்கையான மக்கள் பாராளுமன்றத்தை நோக்கிப் பேரணி யாகச் செல்வதாக தெரிவிக்கப்பட்டது.

பாராளுமன்றத்தை முற்றுகையிடும் வகையில் மக்கள் அங்கு திரண்டு பேரணியாக சென்றுகொண்டிருப்பதாக தகவல் கிடைத்ததை அடுத்தே குறித்த பகுதியில் திடீர் மின்தடையேறந்படுத்தப் பட்டிருப்பதாக நம்பப்படுகிறது. (அ)

# இலங்கை போராட்டக்காரர்கள் குறித்து அவதானம் செலுத்தவேண்டும் இந்தியா

### எச்சரிக்கிறார் சுப்பிரமணியன் சுவாமி

புதுடில்லி, ஜூலை 14

இலங்கையில் ஆட்சி மாற்றத்தை வலியுறுத்தியதாக போராட்டத்தில் ஈடுபட்டு வருபவர்கள் தீவிரவாத இயக்கப் பின்னணியில் செயற்படுவதாகவும் அவர்கள் குறித்து இந்தியா அவதானமாக இருக்கவேண்டும் எனவும் சுப்பிரமணியன் சுவாமி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் கட்டுக்கடங்காதவர்களின் நடத்தை குறித்து இந்தியா எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்திய ஆளும் கட்சி அரசியல்வாதியான சுப்பிரமணியன் சுவாமி, இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

தனது ருவிட்டர் பதிவில், இந்த எச்சரிக்கையை விடுத்துள்ள அவர், கொழும்பில் சுற்றித் திரியும் கட்டுக்கடங்காத கூட்டத்தினர், நக்சல்கள், ஜெகாதிகள், சமூகவிரோதிகளால் வழி நடத்தப்படும் தகவல்கள் கிடைத்துள்ளன.

எனவே இந்தப் பிரிவுகளால் இலங்கையின் சீரழிவு மற்றும் தமது நாட்டின் எதிர்கால தாக்கம் குறித்து இந்தியா கவனம் செலுத்த வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

முன்னதாக ராஜபக்ஷர்களை இந்தியா பாதுகாக்க, இந்தியா தமது படைகளை அனுப்பவேண்டும் என்று சுப்பிரமணிய சுவாமி கோரியிருந்தார். எனினும் இந்த கோரிக்கையை இந்திய வெளிவிவகாரத்துறை நிராகரித்திருந்தது. (அ)

# நாட்டில் நீதி, சமாதானத்தை உடன் உறுதிப்படுத்தவேண்டும்

### பொதுஜன பெரமுன கோரிக்கை

கொழும்பு, ஜூலை 14

உடனடியாக நாட்டுக்குள் நீதி மற்றும் சமாதானத்தை உறுதிப்படுத்துமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கோரிக்கை விடுத்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பதில் ஜனாதிபதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பாதுகாப்பு தரப்பினர் இதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் எனவும் இதன்போது கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதற்காக பொதுஜன பெரமுன முழு ஒத்துழைப்பையும் வழங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.07.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து-
வழங்குபவர் உளவள துனையாளர் -யாழ் பாவாணன்
07.10 மணி: இயற்கைவழி-எஸ்.உதயசீலன்-சமுர்த்தி உத்தியோகஸ்தர்




7.15 மணி : கதைவழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-06 கான்டில்,எதுக்கும் துணிந்தவன் திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை




**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்
7.30 மணி : வெள்ளிடை நுட்பம்-
தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : கச்சேரி ஆரம்பம்-இசை நிகழ்ச்சி

10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகேகாவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
(மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை
(சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை
(திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம்
(மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு